# பிரச்னைகளை பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க பாகிஸ்தான் விருப்பம்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 239
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 23 றஜப் 26 வியாழக்கிழமை (9-10-69)

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம்
— ரூ. 18-00
ஆறு மாதம்
— ரூ. 34-00
ஒரு வருடம்
ரூ. 66-00

ஈழநாடு
சந்தா
வ[illegible]ப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம்
— ரூ. 4-00
ஆறு மாதம்
— ரூ. 7-50
ஒரு வருடம்
— ரூ. 14-00
முற் பணம்
கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம்
அனுப்பப்படும்

## தினேசிங் வெளியிட்ட தகவல்

புதுடில்லி, அக். 8

இந்தியாவினுடனுன பிரச்னைகள் யாவற்றையும் இருதரப்பும் பேசித் தீர்த்துக் கொள்வதுபற்றி பாகிஸ்தான் நாட்டம் காட்டியிருப்பதாக புதுடில்லியில் இந்திய வெளிஉறவு அமைச்சர் திரு தினேசிங் கூறினுர்.

ஐ. நா. மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு இன்று திருதினேசிங் இந்தியா திரும்பினுர்.

அமெரிக்காவில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் திரு நவாப்சாதா சேர் அலிகானுடன் மூன்று முறை ஆலோசனைகள நடத்தியதாகவும், பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்பதே இந்தியாவின் நிலையான கருத்தாக இருந்து வருகிறதென்றும் திரு திேனசிங் குறிப்பிட்டார்.

### ரபாத் மாநாடு

ரபாத் மாநாட்டைத் தொடர்ந்து இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கையில் அடிப்படை மறுசிந்தனை ஏதும் இருக்காதென்று திரு தினசிங் கூறினுர்.

அமெரிக்காவில் தாம் சந்தித்துப் பேசிய பாகிஸ்தானைத் தவிர்ந்த ஏனைய எல்லா முஸ்லிம் நாடுகளும் ரபாத்தில் இந்தியக் குழுவுக் ஏற்பட்ட நிலைகுறித்து கவலை தெரிவித்தாதகவும் பாகிஸ்தான் திடீரென்று ஒரு நிலையை மேற்கொண்டதால் தங்களை ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது என்று கூறியதாகவும் அவர் சொன்னுர்.

### ஈபான் சந்திப்பு

இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் திரு அபா ஈபானைச் சந்தித்ததுபற்றியும் திரு தினேசிங் குறிப்பிட்டார். மேற்காசிய 'நிலைமை பற்றியும் அங்கு அமைதியை ஏற்படுத்துவதுபற்றியும் இருவரும் விவாதித்ததாக அவர் சொன்னுர்

### ரோஜர்ஸ் சந்திப்பு

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்சுடன் நடத்திய பேச்சுக்கள் பற்றியும் நிருபர்கள் திரு. தினேசிங்சிடம் கேட்டார்கள்.

ஹனேயிலுள்ள இந்திய தூதரகத்தின் அந்தஸ்து விஸ்தரிக்கப்படவிருப்பது பற்றி திரு. ரோஜர்ஸ் குறிப்பிட்டதாகக் கூறிய திரு. தினேசிங், இந்தியா எதைச் செய்தாலும் அது அமைதியை நோக்கமாகக் கொண்டதாகவே இருக்கும்என்று கூறியதுடன் இம்மாதிரி விஷயங்களில் முடிவு எடுப்பது இந்தியாவின் சொந்த விஷயம் என்றும் அதில் வெளிநாடுகள் தலையிட முடியாதென்றும் அவருக்குத் தெளிவுபடுத்தியதாகவும் கூறினுர்.

# பலாத்காரத்தை தடுப்பதற்கு காந்திஜியின் போதனை அவசியம்



திருநெல்வேலி கலைக்கோயில் சார்பில் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் 125-வது நாட்டிய நிகழ்ச்சி இன்று மாலை யாழ் நகரில் நடக்கவிருக்கிறது இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றும் விஜயா சகோதரிகளான செல்விகள் மலர், மாலினி ஆகியோரின் நடனத்தோற்றத்தை இங்கு காண்கிறீர்கள்.

## பெண்கள் அரசியலில் அதிக பங்கு கொள்ள வேண்டும்

### யாழ்ப்பாணத்தில் ஸ்ரீமதி பண்டிட்

[காரியாலய நிருபர் ]

யாழப்பாணம், வியாழன்

சமயம் மனிதனின் வாழவில் இன்றியமையாதது. அதுபோல அரசியலும் மனிதனின் வாழவில் இன்றியமையாதது இதை உணர்ந்துதான் மகாத்மா காந்தி அடிகள் சமயத்தையும் அரசியலையும் இரண்டறக் கலந்தார். இரண்டும் சேர்ந்தால்தான் வாழவு பூரணமாகும் என்பதை தெளிவாக விளக்கினுர். சுதந்திரப் போராட்டம் உன்னதமான உண்மையான இலட்சியம் வாய்ந்த இயக்கம் என்பதை தத்துவ ரீதியாக காந்திஜி விளக்கினுர்.'

உலகில் பலாத்காரம் அதிகரித்துக்கொண்டு போவதால் அதைத்தடுப்பதற்கு காந்தியின் போதனை அவசியம் தேவைபபடுகிறது. பெண்கள் அரசியலில கூடுதல் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும்,

நேற்று மாலை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் சொற்பொழிவாற்றுகையில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் இவ்வாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மாநகர [illegible]

...சியில் பெண்கள் தான்இன்று கூடிய பங்கெடுத்துக் கொள்ள முன்னுக்கு வருகின்றனர்கள். பெண்கள்தான் அரசியல் வாழ்க்கையில் கூடிய பங்கெடுத்துக் கொள்ள முன்வரல் வேண்[illegible]

செல்லும் இந்த வேளையில் காந்தியின் போதனைகளை நாம் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

### சத்தியாக்கிரகம்

தனது நம்பிக்கைக்குப் [illegible]

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு எதியோப்பியாவில் வேலை

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தைச் சேர்ந்த ஆறு பட்டதாரிகளுக்கு 'எதியோப்பியா' என்ற இடத்தில் ஆசிரிய நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

சங்கத்தின் முன்னுள் உபதலைவர் திரு. அப்பாத்துரை உட்பட ஆறுபட்டதாரிகளே இம்மாதம் 14-ம் திகதி ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள 'எதியோப்பியா' என்ற இடத்துக்குச்செல்கின்றனர்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தலைவர் திரு. சதானந்தன் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், வெளிநாட்டு அரசாங்கம் இலங்கைப் பட்டதாரிகளுக்குக் கொடுக்கும் கௌரவத்தை இலங்கை அரசாங்கம் கொடுக்கத்தவறுகின்றது என்று சொன்னுர்.

நியமனம் பெற்றுச் செல்லும் ஆறுபட்டதாரிகளுக்கும் மேற்படி சங்கம் இம்மாதம் 10-ம் திகதி தேநீர் விருந்தும் அளிக்கவிருக்கின்றது. (ஈ. நி.)

யாழ். நகரில் யு. என். பி. கிளை

## பிரதமரை அழைத்து கூட்டம் நடத்த முடிவு

யாழ்ப்பாணம், வியாழன்

ஐக்கிய தேசியக்கட்சியின் வடஇலங்கைக் கிளையின் ஆரம்பக்கூட்டம்நேற்றுமுன் தினம் ராஜா கட்டிடத்தில் நடைபெற்றது. திரு. சி. வாமதேவா கூட்டத்துக்கு தலைமைவகித்தார். இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளரும் செனட்டருமான திரு. ஜின[illegible]

...பற்றியும் குறிப்பிட்டார். சிங்கள இனத்தவன் என்ற முறையிலோ அல்லது செனட்டர் என்ற முறையிலோ தாம் யாழ்ப்பாணத்துக்கு வரவில்லையென்றும் தமிழ் மக்களின் ஒரு சகோதரன் என்ற முறையிலேயே இங்குவந்ததாகவும் ஜினதாஸ நியதிபால கூறினுர்.

அடுத்த மாதத்திற்கிடையில் திரு [illegible]

## தாமாகவே அழைத்துவிட்டு பரீட்சிக்க மறுத்தார்களாம்

## இறந்ததாயின் வயிற்றில் உயிர்க் குழந்தை

திருநெல்வேலி கலைக்கோயில் சார்பில் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் 125-வது நாட்டிய நிகழ்ச்சி இன்று மாலை யாழ் நகரில் நடைபெறவிருக்கிறது. இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றும் விஜயா சகோதரிகளான செல்விகள் மலர், மாலினி ஆகியோரின் நடனத்தோற்றத்தை இங்கு காண்கிறீர்கள்.

# தாமாகவே அழைத்துவிட்டு பரீட்சிக்க மறுத்தார்களாம்

## தமிழ்ப்பண்டிதர்கள் கவலை

வெள்ளவத்தை புதன்

தமிழ்ப் பண்டிதர்களைத் தலைமையாசிரியர் பதவிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைத்த கல்வி இலாகாவினர் அவர்களைப் பரீட்சிக்கவோ தராதரப்பத்திரங்களைப் பார்வையிடவோ மறுத்துவிட்டதாம்.

நேர்முகப் பரீட்சைக்கு சென்ற பண்டிதர்களைப் பார்த்து நீங்கள் பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம் எடுக்கிறீர்களா என்று வினவிய அதிகாரிகள் அவர்கள் இல்லையென்று பதில் கூறவே அப்படியானால் ஏனைய பட்டதாரிகளுடன் சேர்த்து உங்களையும் நேர்முகப்பரீட்சை செய்யமுடியாதுஎன்று கூறினார்களாம்.

அப்படியானால் நேர்முகப் பரீட்சைக்கு தம்மை ஏன் அழைக்க வேண்டுமென்று தமிழ்ப் பண்டிதர்கள் கவலையுற்றிருக்கின்றனர்.

நீண்டகாலமாகப் பண்டிதர்களின் கிளர்ச்சியைத் தொடர்ந்து அவர்களது தராதரத்தையும் பட்டதாரிகளின் தரத்தோடு அரசாங்கம் உயர்த்தியுள்ளது என்றும் முதலில் சிங்களப் பண்டிதர்களே இவ்வாறு தரமுயர்த்தப்பட்டனர் என்றும் தொடர்ந்து தமிழ்ப் பண்டிதர்களும் அவ்வாறே பட்டதாரிகளின் தரத்திற்கு உயர்த்தப்பட்டனர் என்றும் இது அரசாங்க வர்த்தமானியில்கூட வெளியிடப்பட்டது என்றும் இலங்கை பண்டிதர் சங்கத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

# இறந்ததாயின் வயிற்றில் உயிர்க் குழந்தை

பெர்னி, அக் 8

சுவிட்சர்லாந்து நாட்டில் பெர்னி என்ற இடத்தில் எலிசபெத் என்றகர்ப்பிணிப் பெண் ஒரு கார் விபத்தில் மரணமானதை தொடர்ந்து அவரது உடல் பரிசோதனைக்காகஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டது. அப்பெண் இறந்து 33 மணி நேரம் கழித்து அவரது உடலை டாக்டர்கள் அறுத்துப்பார்த்தபோது அவரது வயிற்றில் குழந்தை உயிருடன் இருக்கக் கண்டு அதிசயித்தனர். இறந்துபோன பெண்ணின் வயிற்றில் இவ்வளவு நீண்டநேரம் குழந்தைஉயிருடன் இருந்தது குறித்து டாக்டர்கள் வியப்பு தெரிவித்தனர். குழந்தை இப்போது நல்லஉடல் நலத்துடன் இருக்கிறதாம்.

யின் போதனை அவசியம் தேவைபபடுகிறது. பெண்கள் அரசியலில் கூடுதல் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும்,

நேற்று மாலை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் சொற்பொழிவாற்றுகையில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை அளித்த நகர வரவேற்புக்கு நன்றி தெரிவித்து ஸ்ரீமதிவிஜயலட்சுமி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இங்கு நீங்கள் அளித்த வரவேற்பு எனது மனதைப் பெரிதும் கவர்ந்துள்ளது. நானும் எனது நாட்டு மாநகர சபையில் கல்விக் குழுவின் தலைவராக இரண்டு ஆண்டுகள் கடமையாற்றினேன். மாநகர சபை மூலம் அரசியல் கொள்கைகளை அரசியல் வாதிகள் பரப்பி மக்கள் மத்தியில் பதியவைக்க முடியும்

அரசியல் வாழ்க்கை சங்கீதக் கதிரை போன்றது யாழ்ப்பாண மாநகரசபையிலும் ஒரு பெண் அங்கத்தவராக விருக்கின்றார். பாரதத்திலும் மாநகர ஆட்சியில் பெண்கள் தான்இன்று கூடிய பங்கெடுத்துக் கொள்ள முன்னுக்கு வருகின்றார்கள். பெண்கள்தான் அரசியல் வாழ்க்கையில் கூடிய பங்கெடுத்துக் கொள்ள முன்வரல் வேண்டும். ஏனென்றால் பெண்கள் எந்த விஷயத்திலும் நுணுக்கமாக, அமைதியாக, ஆராய்ந்து தந்திரமாகச் செயலாற்றக் கூடியவர்கள்.

மகாத்மாவின் சக்தி ஒரு மாயசக்தியாகும். அந்த மாயசக்திதான் எமது குடும்பத்தை மிகவும் கவர்ந்ததாகும்.

### பலாத்காரம் வேகமாகபரவுகிறது

காந்தி தனது அறப் போராட்ட வாழ்க்கையில் புத்தர், யேசுநாதர் போன்ற பெரியார்களின் வழிகளை எடுத்துக்காட்டி தனதுஇலட்சியங்களைப்புனிதமாக்கினர். பலாத்காரம் உலக நாடுகளிடையே மிக வேகமாகச் செல்லும் இந்த வேளையில் காந்தியின் போதனைகளை நாம் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

### சத்தியாக்கிரகம்

தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான சத்தியாக்கிரக வீரர்களை அறவழிப்படுத்தினர் காந்தி. வாழ்க்கையில் எப்போதும் சத்தியம் தவறுதவன் தான் சத்தியாக்கிரகம் செய்ய முடியும்

(4-ம் பக்கம் பார்க்க)

வட இலங்கைக் கிளையின் ஆரம்பக்கூட்டம்நேற்றுமுன் தினம் ராஜா கட்டிடத்தில் நடைபெற்றது. திரு. சி. வாமதேவா கூட்டத்துக்கு தலைமைவகித்தார். இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளரும் செனட்டருமான திரு. ஜினதாஸ நியதிபால கலந்து கொண்டார்.

அவர் உரை நிகழ்த்துகையில், ஐக்கியதேசியக்கட்சியின் எதிர்காலத்திட்டங்கள் பற்றியும் சமூக உறவுகள் முறையிலோ அல்லது செனட்டர் என்ற முறையிலோ தாம் யாழ்ப்பாணத்துக்கு வரவில்லையென்றும் தமிழ் மக்களின் ஒரு சகோதரன் என்ற முறையிலேயே இங்குவந்ததாகவும் ஜினதாஸ நியதிபால கூறினர்.

அடுத்த மாதத்திற்கிடையில் திரு டட்லி சேனநாயகாவை அழைத்து யாழ்ப்பாணத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தவேண்டும் என்று ஐ. தே. கட்சி வட

(4-ம் பக்கம் பார்க்க)

# காந்தியின் முன்னணி சீடர் என யாழ் மேயர் வரவேற்பு

யாழ்ப்பாணம், வியாழன்

மகாத்மா காந்தியின் முன்னணிச் சீடர்களில் ஒருவராகத்திகழ்ந்து அவருடை அன்பையும், நம்பிக்கையையும் பெற்ற தாங்கள் மகாத்மா காந்தி நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள இலங்கைக்கு வருகை தந்தது மிகப் பொருத்தமானதாகும். உலக சமாதானத்துக்கும் அனைத்துலக நட்புறவுககும் பல்லாண்டு சேவை புரிய தங்களுக்கு திடகாத்திரத்தையும் ஆரோக்கியத்தையும் அளிக்க வேண்டுமென யாழ். நகரமக்கள் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டை வரவேற்றுப் பேசுகையில் யாழ் நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா இவ்வாறு தெரிவித்தார்.

நகரசபைவாசலில் வைத்து நகரமுதல்வர், ஆணையாளர், அங்கத்தவர்கள் ஆகியோர் மாலையிட்டு மேளவாத்தியங்களுடன் நகர மண்டபத்துக்கு ஸ்ரீமதி பண்டிட்டை அழைத்து வந்தனர்.

நகர முதல்வர்தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்ஸ்ரீமதி விஜயலட்சுமியின் சமாதான சரித்திரச்சேவைகள் பற்றி எடுத்துக் கூறினர்.

வெள்ளிப் பேழையில் வைத்து வரவேற்புப்பத்திரம் வழங்கப்பட்டது. விழா மண்டபமுன் வரிசையில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீட்டர்ஸ், காந்தி நூற்றுண்டு விழா தேசியசபை பிரமுகரான திரு. கே. வி. தங்கராஜா, ஸ்ரீமதி விஜயலட்சுமியின் பேத்தியான மோத்தா ஆகியோர் காணப்பட்டனர். (கா. நி.

# இன்று ஸ்ரீமதி பண்டிட் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வியாழன்

காந்திநூற்றுண்டுவிழாவை யொட்டி இலங்கை மகளிர் சேவாசதனம் இன்று காலை யாழ்ப்பாணம் நகர மண்டபதில் ஒரு பொதுக்கூட்டத்தைநடாத்தவிருக்கிறது. திருமதி ஆர். ஆர். நவரத்தினம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட், வரவேற்கப்படுவார். இக்கூட்டத்தில் சக்திசேனை ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது

# இன்று வலி. கிழக்கு ஆசிரிய சங்கத்தின் கதம்பவிழா

யாழ்ப்பாணம், வியா.

வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கதம்பக் கலைவிழா இன்று மாலை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

யாழ். நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா இவ்விழாவுக்குத்தலைமை வகிப்பார். இப்பகுதியைச்சேர்ந்த 8 பாடசாலைகள் இவ்விழாவில் கலந்து கொள்கின்றன.

பாலர் நிகழ்ச்சி, அபிநயம், இன்னிசை, நடனம், நாடகம் ஆகியன விழாவல் இடம் பெறும். (கா. நி)

# "நான் பிலிப்பல்ல; சுகததாசா"

கோட்டை, புதன்

''நான் பிலிப்பல்ல; நான் சுகததாசா'' தேசிய சேவை அமைச்சர் திரு. வி. ஏ சுகததாசாநேற்று சி எம் யூ தலைவர் திரு பாலாதம்புவைப் பார்த்து கூறினர்.

பெற்றோலியம் கூட்டுஸ்தாபன ஊழியர் வேலைநிறுத்தம் சம்பந்தமான பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் அவ்வாறு கூறினர்.

கூட்டுற்றொழில் அமைச்சர் தனது கூட்டுத்தாபன ஊழியருக்கு அளித்துள்ளசலுகைகளைச் சுட்டிக்காட்டிய திரு. பாலாதம்பு, தேசிய அமைச்சு கோரிக்கை வழங்காதது குறித்து அமைச்சரிடம்தெரிவித்த போது திரு. சுகததாசா ''நான் பிலிப்பல்ல, நான் சுகததாசா'' என்று கூறினர்.

மந்திகைக்கு

## இரு டாக்டர்கள்

புலோலி, புதன்

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு அடுத்த மாதம் தொடக்கம் மருத்துவ டாக்டர் ஒருவரும் கண் டாக்டர் ஒருவரும் நியமிக்கப்படவிருக்கின்றனர். கொழும்பிலிருந்து இவர்கள் இங்கு மாற்றப்படவிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

# விமான நிலையத்தில் பெண்களின் ஆர்வம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் நேற்றுப் பகல் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய போது அவருக்கு உத்தியோகபூர்வமாக மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

இலங்கை விமானப்படை விமானத்தில் பகல் 11-25 மணிக்கு பண்டிட் தமது பேத்தி மீனாட்சி மேத்தாவுடன் விமானத்திலிருந்து இறங்கிய போது யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் மனைவி திருமதி பிரான்சிஸ் பீட்டர்ஸ் மலர் மாலை சூட்டி வரவேற்றார்.

நேற்றுமாலை யாழ். நகர மண்டபத்தில் ஸ்ரீமதி பண்டிட்டுக்கு யாழ். நகர முதல்வர் திரு. எஸ். நாகராசா தலைமையில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. சகல இனமக்களிடையேயும் ஒற்றுமையும், சமாதானமும் ஏற்பட வேண்டுமென்ற கருத்தை அவர் இங்கு வலியுறுத்திக் கூறினர்.

விஜயலட்சுமி பண்டிட் புள்ளியும், நீலக்கரையுமுள்ள வெள்ளைக்கதர் சேலையும், வெள்ளைக் கதர் சட்டையும் அணிந்து கையில் வெள்ளை நீலநிற பையுடன், கறுப்புக் கண்ணாடி அணிந்து புன்னகை தவழ விமானத்திலிருந்து இறங்கினர். இவருக்கு முன்னதாக திரு. கே. வி. தங்கராஜா விமானத்திலிருந்து இறங்கினர். கொழும்பிலிருந்து மட்டு நகர் சென்று இவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள்

### பெண்கள் கூட்டம்

ஸ்ரீமதி பண்டிட்டை வரவேற்க விமான நிலையத்தில் ஆண்களிலும் பார்க்க பெண்களே கூடுதலாக வந்திருந்தார்கள். கூடுதலான பெண்களும் கைகளில் மாலைகளுடனும், மலர்ச் செண்டுகளுடனும் மலர்ந்த முகத்துடன் காட்சியளித்தனர்.

அடுத்தடுத்து பொலிஸ் சுப்பிரின்டனின் துணைவியார் திருமதி சுந்தரலிங்கம், மேலதிக அரசாங்க அதிபரின் மனைவி திருமதி சபாரத்தினம் ஆகியோர் உட்பட நூற்றுக்கணக்கான பெண்கள் ஸ்ரீமதி விஜயலட்சுமிக்கு மலர்மாலையிட்ட போது அவர் மாலைகளைக் கையில் வாங்கிக் கொண்டார்.

அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் உட்பட அனேகமானோர் இவருக்கு மலர்ச் செண்டு வழங்கினர்.

### வந்தனம் கூறினர்

'சித்தி விநாயகனே சரணம்' 'ரகுபதி ராகவராஜாராம்' ஆகிய நாதஸ்வர இசையோடு அழைத்து வரப்பட்டபோது, பலாலி பல்கலைக் கழகம், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றின் மாணவிகள் விமான நிலையத்தின் இருமருங்கும் அணிவகுத்து நின்று வந்தனம் கூறினர்கள்.

ஆண்கள் மலர்ச் செண்டுகளும் பெண்கள் மலர் மாலைகளும் இட்டு இவரை வரவேற்றனர். திருமதி சின்னத்தம்பி இவருக்கு பொட்டிட்டு வரவேற்றார்.

பொலிஸ் சுப்பிரிண்டன் திரு ஆர். சுந்தரலிங்கம், வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், செனட்டர் எஸ் நடராசா, திரு வி. தர்மலிங்கம் எம். பி; திருமதி எஸ் கதிரவேற்பிள்ளை, வண மதுரநாயகம், அகில இலங்கை மகளிர் பேரவைச் செயலாளர் திருமதி எஸ். சரவணமுத்து, முதலியார் முத்துத்தம்பி, முதலியார் சின்னத்தம்பி, திரு. கு. நேசையா, காரியாதிகாரிகள், கல்லூரி அதிபர்கள், கிராமசேவையாளர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், பிரமுகர்கள், மாணவர்கள் உட்படப்பலர் விமான நிலையத்தில் திரண்டு நின்றனர்.

இங்கு குழுமிநின்றவர்கள் ஸ்ரீமதி விஜயலட்சுமிக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டபின்னர் இவர் காங்கேசன்துறை விருந்தினர் விடுதிக்குச் சென்று மதிய போசனம் எடுத்தார். (கா. நி.)

# 'அடிமைப்பட்ட மக்களுக்காக உழைக்க முன்வரவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா.

''மகாத்மா காந்திஜியின் இலட்சியம் சத்தியம், அகிம்சை ஆகியவற்றை நோக்கமாகவும், ஆதரவாகவும் கொண்டது இந்த இலட்சியம் புதிய மனித குலத்தை உருவாக்கக்கூடிய உயர்ந்த இலட்சியம். இந்த இலட்சியங்களுக்காக நாங்கள் உழைக்கவேண்டும்''

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றிரவு நடைபெற்ற காந்தி நூற்றுண்டு விழாவில் கலந்து கொண்டுபேசுகையில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் மேற் கண்டவாறு கூறினர்.

திரு. கே. நேசையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஸ்ரீமதி விஜயலட்சுமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''உலகில் அடிமைப்பட்டிருக்கும் மக்களின் விமோசனத்துக்காகவும், அயராது உழைக்க முன்வரவேண்டும். இதற்காகத் தொண்டாற்றுவது பெரும் பணியாகும், காந்திஜியின் அருமையான தத்துவங்கள் மக்களுக்கு வாழ்வளிக்கக்கூடியவை''

யாழ். அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ், திரு. ஹன்டி பேரின்பநாயகம் ஆகியோரும் பேசினர்கள்.

# கிடைக்கும் அதிக சீரகம்

கோட்டை, வியாழன்

அடுத்த மாதத்திலிருந்து கூப்பனுக்கு ஒரு அவுன்ஸ் சீரகம் வழங்கப்படவிருக்கிறது. இப்போது அரை அவுன்ஸ் சீரகமே வழங்கப்பட்டுவருகிறது.

# தி முக எதிர்ப்புக்கு ரூ. 20,000

கோட்டை, வியாழன்

இலங்கை திராவிட முன்னேற்றக்கழக எதிர்ப்பு நடவடிக்கைக்கு சிங்கள மகாஜனபக்ஜய கட்சியின் தலைவர் திரு. ஆர். ஜி.சேனநாயக்கா 20 ஆயிரமரூபாயை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இ. தி. மு. க எதிர்ப்புக் கூட்டத்திலேயே திரு ஆர். ஜி இத்தொகையை வழங்கினர்,

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிராக சிங்கள மக்கள் எல்லாரும் இணைந்து போராட வேண்டிய காலம் வந்துவிட்டதாக முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஜநாயக்கா இக்கூட்டத்தில் அறிவித்தார். அரசாங்கம் இ. தி. மு. க எதிராக நடவடிக்கை எடுக்கத்தவறிவிட்டதாக திரு ஹேமா குற்றஞ்சாட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றுக்கு கணககியல்தெரிந்த இலிகிதர் ஒருவர் தேவை. வயது (30—40) தட்டச்சு தெரிந்தவருக்கு விசேஷ சலுகைவழங்கப்படும். அனுபவத்தையும், எதிர்பார்க்கும்சம்பளத்தையும்குறித்து விண்ணப்பிக்கவும். விளம்பர இல 1462, மே|பா, ஈழநாடு, யாழ்ப்பாணம்.

1462

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன்: 9—10—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9·00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாணவர்மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடுபாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு6-15இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின்இசை, 7-35 வானொலி குறுக்கெழுத்துப் போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 222, காங்கேசன்துறை வீதி, திரு. கந்தையா பரமு அவர்களிடம் 30-6-66 தொடக்கம் 30-6-67 வரை வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாததை 30-10-69 வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்,
1780 வண்ணார்பண்ணை.

## கேள்விப் பத்திரம்

யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்திச்சங்க (கன்ரீன) பொறுப்பு ஏற்று நடத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும். முடிவுத் திகதி 20-10-69 நண்பகல் 12 மணி. விபரங்களுக்கு காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்.

8-10-69 மு.சோமசுந்தரம்,
1782 கௌரவ காரியதரிசி,

## இளம் பெண்ணை காணவில்லை

### பொலிசில் புகார்

உடுப்பிட்டி, புதன்

பெற்றோருக்குத் தேநீர் கொடுத்துவிட்டு மலம் கழிக்கப்போவதாக கூறிச்சென்ற இளம்பெண் மாயமாய் மறைந்துவிட்டாராம். கரணவாய் தெற்கு ஒசட்டி என்னும் இடத்தில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கந்தன் என்பவரின் மகளான பூமணி (வயது 16) என்னும் இளம் பெண்ணே காணுமல் போனவராவார். அவர் தனது காதலனுடன் சென்றிருக்கலாம் எனப் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

பருத்தித்துறைப் பொலிசார் புலன் விசாரணைசெய்து வருகின்றனர்.

களைகள் எல்லாவற்றையும் ஒழித்து

இறுதி ஆட்டத்தில்

# றெக்ளமேஷனின் அமோக வெற்றி

## மன்னார் வீரர்களுடன் 11-ம் திகதி விளையாடுவர்

யாழ்ப்பாணம், வியா

விளையாட்டமைச்சினால் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சாம்பியன் பிரிவுகளிடையே நடைபெற்று வந்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில், 'றெக்கிளமேசஷன்' சனசமூக நிலையம் - 'குருநகர்' சனசமூக நிலையத்தை மிக இலகுவாக வெற்றி பெற்றது.

இப்போட்டி தொடங்கி முடிவடையும் வரை றெக்கிளமேஷன் கோஷ்டியினர் மிக வேகமாகவே விளையாடினர். இக் கோஷ்டியின் இடது முன்னணி வீரர் தேவராசா ஆட்டம் தொடங்கி பத்து நிமிடங்களுக்குள் முதலாவது கோலை எதிர்பாராத விதமாகப் போட்டார். இடைவேளையின் போது றெக்கிளமேஷன் கோஷ்டியினர் 1—0 கோலைப் பெற்றிருந்தனர்.

இடைவேளையின் பின் றெக்கிளமேஷன் கோஷ்டியின் முன்னணி வீரர்களும் பின்னணி வீரர்களும் ஒன்று சேர்ந்து விளையாட முற்பட்டதால் எதிர்க் கோஷ்டியின் பின்னணி வீரர்கள் மிகவும் சோர்வடைந்து காணப்பட்டனர். இந்நிலையில் றெக்கிளமேஷன் கோஷ்டியினர் மேலும் மூன்று கோல்களை அடுத்தடுத்துப் போட்டனர். இக் கோல்களை இக் கோஷ்டியின் முன்னணி வீரர்களான தேவராசா, பெனடிற், போல் ஆகியோர் முறையே போட்டனர்.

ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கும் போது குருநகர் சனசமூக நிலையக் கோஷ்டியின் வலது முன்னணி வீரர் கொண்டு சென்ற பந்தை றெக்கிளமேஷன் கோஷ்டியின் பின்னணி வீரர்கள் தடுக்கும் போது எதிர்பாராத விதமாக பந்து இக் கோஷ்டியினரின் கால்களில் பட்டு கோல்வாயினுள் சென்றது. ஆட்டம் முடிவடையும் போது றெக்கிளமேஷன் சனசமூக நிலையம் குருநகர் சனசமூக நிலையத்தை 4—1 கோல்களால் வெற்றி பெற்றது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்கு இன்ஸ்பெக்டர் புஸ்ஸல் லே மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இப்போட்டி தொடங்கு முன் இரு கோஷ்டி வீரர்களையும், வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்கு யாழ். மாவட்ட விளையாட்டமைச்சின் பொறுப்பதிகாரி திரு. போல் யேசுதாசன் அறிமுகம் செய்து வைத்தார்.

றெக்கிளமேஷன் சனசமூக நிலையம் வரும் 11-ம் திகதி மன்னார் காரியாதிகாரி பிரிவுக் கோஷ்டியுடன் யாழ். விளையாட்டரங்கில் மோதவிருக்கின்றது.

(தே. நி)

விளையாட்டுப் போட்டி

## இவரும் பங்குபற்றுவார்

யாழ்ப்பாணம், வியா.

இன்றும் நாளையும் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டியில், தீவுப்பகுதியிலிருந்து முதன் முறையாக புங்குடுதீவு மகாவித்தியாலத்தைச் சேர்ந்த மாணவர் சி. தனபாலசுந்தரம் பங்கு கொள்ளவிருக்கிறார்.

1967-ம் ஆண்டில் இவர் 100, 200 மீட்டர் ஓட்டத்தில் புதிய சாதனையை நிலைநாட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது, (தே. நி)

## அகில இலங்கை நடனப்போட்டி

உடுவில், புதன்

ஈழத்தில் கலைத்துறையில் ஈடுபாடுகொண்டு தொண்டாற்றிவரும் இணுவில் இசை, நடன கிராமிய கலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுபசார விழாக்கள்

உடுவில் புதன்

மானிப்பாய் மெம்மோரியல் மகாவித்தியாலயத்திலிருந்து வெலிகம அரபா மகாவித்தியாலயத்திற்கு இம்மாதம் முதல் இடமாற்றலாகிச் செல்லும் ஆசிரியர் திரு. எஸ். ரி. ஆனல்டுக்கு மேற்ப்டி பாடசாலை மாணவர்களால் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் திரு. வி. ஜி சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பண்டிதர் திரு. கதிரவேலுப்பிள்ளை பாராட்டுரை வழங்கினார் மாணவர்களும் பாராட்டுத் தெரிவித்தனர்.

திரு. எஸ்.ரி. ஆனல்டுக்கு 'பிக்னல் இல்ல' மாணவர்களும் திரு எம். குமாரவேலு தலைமையில் ஒருபிரிவுபசாரம் நடத்தினர்.

பாடசாலை ஆசிரியர் நல்லுறவு மன்றத்தினரால் அளிக்கப்பட்ட பிரிவுபசார தேநீர் விருந்து விழாவுக்கு திரு ஞானசிகாமணி அன்னப்பா தலைமை வகித்தார். திருவாளர்கள் வி. ஐயாத்துரை, ஏ. எஸ். ஐயாத்துரை, எஸ். சின்னத்துரை ஏ. எ ஐயாத்துரை, திருமதி மேதர் ஆகியோர் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர். ஆசிரிய-நல்லுறவு மன்றத்தின் சார்பில் திரு. ஆனல்டிற்கு பரிசில் வழங்கப்பட்டது

திரு. எஸ். ரி. ஆனல்ட் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரம், பாராட்டுக்கள் ஆகியவற்றுக்கு நன்றி தெரிவித்தார்

0 0 0

சுழிபுரம், புதன்

பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலய ஆசிரியராய்ப் பணிபுரிந்து, அரசாங்க மின்சார வேலைப் பகுதி ஊழியராக நியமனம் பெற்ற திரு. ச தவராசாவின் சேவையைப் பாராட்டி வித்தியாலய அதிபர் திரு செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் பிரிவுபசார விழா நடைபெற்றது

ஆசிரிய கள் இ. அப்பாத்துரை, இ. ஆறுமுகம், பண்டிதர் அ. ஆறுமுகம் ஆகியோர் பாராட்டுத் தெரிவித்துப்பேசினர். மாணவர்கள் வரவேற்புப்பாப்பாடி உரைநிகழ்த்தினர்.

......

## தமிழ் மூலம் பௌத்தம்

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி, அல்வாய், அச்சுவேலி ஆகிய இடங்களிலுள்ள மூன்று தமிழ்ப் பௌத்தப் பாடசாலைகளிலும் தற்போது பௌத்த மத

## 31ல் பரீட்சை

உடுப்பிட்டி, புதன்

தபாலதிபர், தந்தியாளர் தெரிவுக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 31ம்திகதி நாடு பூராவிலும் உள்ள குறிக்கப்பட்ட பரீட்சைநிலையங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது அன்றையதினம் பூமிசாஸ்திரம், எண்கணிதம், தமிழ், பொதுஅறிவு, பொதுவிவேகம், சொல்வதெழுதல் ஆகிய ஆறு பாடங்களில் பரீட்சை நடைபெறும்.

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
சிவாஜிகணேசன்-தேவிகா
நடித்த
பழநி

ஸ்ரீ காலிங்கா
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
மகாதேவி

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா 2-30
எம்.ஜி.ஆர்- பி. கே. சரஸ்வதி
நடித்த
அந்தமான் கைதி

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம் ஜி ஆர் - ஜெயலலிதா
நடித்த
புதிய பூமி

ராஜா
(யாழ்ப்பாணம்)
Daily 4 Shows
Humphrey Boughard
Fredrick March
in
DESPERATE HOURS
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily 4 Shows
John Phillip Law,
Marisa Mell,
Terry Thomas
in
DANGER DIABOLIK
(Color/Scope)

REGAL JAFFNA
Daily 4 shows

## தாக்கினார்களாம்

புலோலி, புதன்


இரண்டு கோஷ்டியினருக்கிடையே நடைபெற்றதாகக் கூறப்படும் கைகலப்பொன்றில் படுமோசமாகத் தாக்கப்பட்டதாகக் தெரிவிக்கப்பட்ட ஒருவர் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நாகன் சத்தியன் என்று அழைக்கப்படும் சலவைத் தொழிலாளியே காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்.

இந்தச் சம்பவம் துன்னாலை வடக்கிலுள்ள இந்திர அம்மன்கோவில் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றதாகத் தெரிகிறது. சந்தேக நபர்கள் மூவரை பருத்தித்துறை பொலிசார் தேடி வருகின்றனர்.

ஐந்தாம் வகுப்புக்குரிய விறுப்பத்திரங்கள்
அரசாங்கத் திணைக்கள பாடத்திட்டத்தை மட்டும்அடக்கி N. P. T. A பரீட்சைக்கு ஏற்ற முறையில் எழுதப்பட்டவை. வே க. கந்தசாமி(புதுமைலோலன்) எழுதியவை:-
தமிழ்-சூழல்-ஆங்கிலம்
சமயம்-கணிதம் என்பனவும்
செல்வி: பாத்திமா அப்துல்காதர் எழுதியது:
இஸ்லாம் என்பதும் விற்பனையாகின்றன!
மலிவு விலை
விற்பனையாளர்:
அன்பு புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி — நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 2-30, 6-30 9-30 போயா, பிரிபோயா 4 காட்சிகள்
கெப்பிட்டல்
(கொழும்பு)
பிளாஸா
(கொழும்பு)



ரவிச்சந்திரன் ★ ராஜ்ஸ்ரீ
நாகேஷ்★அசோகன்★ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஜரிஸ் மூவிஸாரின்

# எல்லாவற்றையும் ஒழித்து விளைச்சலைப் பெருக்க

புதிய சீர்ப்படுத்திய

# ஸ்டாம் எப்-34




புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34, உங்கள் விளைச்சலைத் தறையாடும புற்கள், முட்கோரைப் புற்கள், அகன்ற இலைகளைகள அனைத்தையும தேர்ந்து அழித்து ஒழிப்பதின் மூலம அமோக நெல் வேளாண்மைக்கு உத்தரவாதமளிக்கிறது.

புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34 இல் 36% டி, பி. ஏ. இடம் பெற்றுள்ளது. இக் களைப்புற்கொல்லி தெளிகருவியின் பீச்சு முனைகளில் கட்டி பட்டு அடைத்துக் கொள்வதில்லை. இதனை அடைப்பத் தெளி கருவி மூலமோ மிஸ்ட் புளோவர் மூலமோ தெளிக்கலாம். முன்னெப் பொழுதைய பார்க்கிலும் சிறப்பான வகையில் இது களைகளைக் கட்டுப் படுத்துகிறது.

அதிக நெல பயிரிட்டுக் கூடுதல் இலாபம் சம்பாதிக்க உபயோகியுங்கள் "ஸ்டாம்" எப் - 34.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

ரசாயனப்பொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள்


பிடத்தக்கது. (தே. நி)

## அகில இலங்கை நடனப்போட்டி

உடுவில், புதன்

ஈழத்தில் கலைத்துறையில் ஈடுபாடுகொண்டு தொண்டாற்றிவரும் இணுவில் இசை, நடன கிராமிய கலைக் கல்லூரி முதன்முறையாக அகில இலங்கை ரீதியில் நடனப்போட்டி ஒன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

அகில இலங்கை ரீதியாக நடைபெற இருக்கும் இப் போட்டியை முன்னிட்டு மேற்படி கிராமியக் கல்லூரி நடாத்தும் வருடாந்தக் கலை விழா நிகழ்ச்சிகள் ஜனவரி மாதம் வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

## தமிழ் மூலம் பௌத்தம்

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி, அல்வாய், அச்சுவேலி ஆகிய இடங்களிலுள்ள மூன்று தமிழ்ப் பௌத்த பாடசாலைகளிலும் தற்போது பௌத்த மத பாடம் தமிழ் மூலம் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

பிள்ளைகள் பெற்றோரின் பூரண சம்மதத்துடன் பௌத்தமத பாடம் பயில்வதாகவும் பௌத்தத்தைத் தழுவுவதில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஆர்வம் காட்டி வருவதாகவும் இலங்கைப் பௌத்தகாங்கிரஸ் பிரமுகர் ஒருவர் கூறினார்.

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 23-ந் திகதி (9-10-69)

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்**- தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். வேண்டாத விவாதங்களால் வீண் பெயர் கேட்க நேரிடும். கலகச்செய்திக்கும் இடமுண்டு. நிதியில் நெருக்கடியும் தோன்றும்.

**ரிஷபம்**- உறவினர்கள் உதவிக்கு வருவர். வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும். காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும். குதூகலமான தினம்.

**மிதுனம்**- தொழில்துறையில் நன்மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும் இன்று சுபதினம்.

**கடகம்**- வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல்வாங்கல் நிவர்த்தியாகும், மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

**சிம்மம்**- செய்தொழிலில் தடுமாற்றநிலை தென்படும். வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ளநேரிடும். குடும்பத்தில் சிறுபிணி தோன்றும். மனத்திடம் விரும்பத்தக்கது.

**கன்னி**- சிந்தனையின் தாக்குதல்கள் உங்களை சிந்திக்க வைக்கும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச்செலவுக்கும் இடமுண்டு. அவசர முடிவைத் தவிர்க்கவும்

**துலாம்**- இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும். தானிய விருத்திக்கும் இடம்உண்டு

**விருச்சிகம்**- எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். அவசரமுடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம். குடும்பத்திலும் பதட்டநிலைதென்படும். இறைநம்பிக்கையும் எதையும் தாங்கும் இதயமும்வேண்டும்.

**தனுசு**- விளைபொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடம்உண்டு தாய்வழித்தனமும் தாராளமாகக் கிடைக்கும். எதிர்கால வாழ்வுக்கான புதிய திட்டத்தை இன்று உருவாக்குவீர்கள். சிறப்பானதினம்.

**மகரம்**- இதயத்தில் அமைதி குன்றும், குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றிமறையும், குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். சிறிய விடயத்திற்கும் அதிக கோபம் தோன்றக்கூடும்.

**கும்பம்**- மதிப்பு உயரும். இல்லறத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். எவ்வித சிக்கலான பிரச்னையையும் பேச்சுவன்மையினால் சமாளித்துவிடுவீர்கள்.

**மீனம்**- ஒளிமயமானதினம். கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள். ...ன்று ஏற்படும் திருப்புமுனை நிம்மதியை அளிக்கும். ...ன நலனும் உண்டு.


John Phillip Law,
Marisa Mell,
Terry Thomas
in
DANGER DIABOLIK
(Color/Scope)

REGAL JAFFNA
Daily 4 shows

SPECIAL MISSION
LADY CHAPLIN
(Adults only)

ரவிச்சந்திரன் ★ ராஜ்ஶ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஶ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனேகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்

# நீயும் நானும்

## செலவினங்களுக்குக் கடிவாளமிடுவது

ஊஷா



ஊஷா விசிறிகள் உங்கள் மாதாந்தச் செலவைச் சுருக்குகின்றன; மின்சாரச் செலவுக் கட்டணத்தைக் குறைக்கின்றன; பராமரிப்பு விஷயத்தில் நீங்கள் பராமுகமாக இருந்துவிடலாம். உங்கள் இல்லத்தின் அழகுக்கு அழகு செய்யும் ஒயிலான வடிவங்களில் கிடைக்கின்றன.*

கீழ் லைடடுடனே லைட் இன்றியோ.



சிறந்ததை வாங்குங்கள்; ஊஷா எல்லாவற்றிலும் சிறந்தது

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, மெயின் வீதி, ஆகியவற்றிலுள்ள ஊஷா விற்பனை நிலையங்களிலும் சாவகச்சேரி, சுன்னாகம், பருத்தித்துறை, அச்சுவேலி, கிளிநொச்சி, திருகோணமலை, அநுராதபுரம் மற்றும் நகரங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் - சீன பேச்சு பீகிங்கில் நடைபெறும்

ஹாங்காங், அக். 8

எல்லைத்தகராறுகள் சம்பந்தமாக ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு சீனு ஒப்புக்கொண்டுவிட்டது

எல்லைப் பிரச்னைமீது ரஷ்யாவுடன் யுத்தத்தில் இறங்கும்கேள்வியேஇல்லையென்று பீகிங் அறிவித்திருக்கின்றது.

சீனுவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் எல்லைத்தகராறுகள் கடந்த சில ஆண்டுகளாகவே இருந்துவருகின்றன இந்தத் தகராறுகள் கடந்த சில மாதங்களில் கைகலப்பாக உருமாறி இருதரப்பிலும் பலர் உயிர்துறக்கவும் நேர்ந்தது. ஏற்கனவே இருநாடுகளுக்கு மிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இடையில் முறிந்து போய்விட்டன. அதைத் தொடர்ந்து அண்மையில வடவியட்னும் அதிபர் ஹோசிமின் மரணமான போது அவரது மரணச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காகப் போயிருந்த சோவியத் பிரதமர் திரு கோஸிஜின் தாயகம் திரும்பும் வழியில் பீகிங் சென்று சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாயைச் சந்தித்து சிலமணி நேரம் பேச்சுவார்த்தைகள் நடத்தினர் இந்தப் பேசுக்களின்போது மீண்டும் எல்லைப் பிரச்னைகள் பற்றி இருதரப்பினரும் கூடி ஆலோசிக்கலாம் என்று திரு கோஸிசின் யோசனை கூறியதாகத் தெரிகிறது. அதன் பின்னர் இதுவரை எதுவித தகவலும் இல்லாமலிருந்தது. இப்பொழுது ரஷ்யாவுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க சீனு முன்வந்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

எல்லைப்பிரதேசத்தில் இருதரப்பினரும் ஏற்கனவே இருந்த நிலையை ஒ புக்கொண்டு படைகளை வாபஸ்பெற வேண்டும் என்று சீனு தொவித்த யோசனையின்மீது இப்பொழுது பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருப்பதாக அறியப்படுகின்றது.

பீகிங்கில் நடைபெறவிருக்கும் இப்பேச்சுக்கள் முதலில் துணைவெளிநாட்டமைச்சாகள் ரீதியில் நடைபெறும் என்று தெரிகின்றது. ஆனல் பேச்சுக்கள் நடைபெறுவதற்கான திகதி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

## கனடாவில் பொலிஸ் வேலை நிறுத்தம்

ஒட்டவா, அக். 8

கனடாவில் மொன்ட்ரியால் நகரில் பொலிசார் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

சம்பளக் கோரிக்கைகளை முன்வைத்து கனடாவில் முக்கிய நகர்களில் ஒன்ருன மொன்ட்ரியாவில் பொலிசார் வேலை நிறுத்தத்தில் இறங்கியதால் அங்கு ராணுவம் சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றது.

பொலிஸ் வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பங்களில் ஒருவர் கொல்லப்பட்டார்

பொலிஸ்வேலைநிறுத்தச் சமயத்தில் பத்து இடங்களில் வீடுகள் உடைத்துக் களவாடப்பட்டிருப்பதாக அறிவிககப்பட்டது.

## ஆந்திராவில் அடுத்தமாதம் மதுவிலக்கு ரத்தாகும்

ஹைதராபாத் அக் 8

ஆந்திராப் பிரதேசத்தில் அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து மதுவிலக்கு ரத்தாகும். இத்தகவலை முதலமச்சர் பிரமானந்த ரெட்டி அறிவித்திருக்கிருர்.

ஆந்திராவில் தெலுங்கானுப் பகுதியில் ஏற்கனவே மதுவிலக்கு அமுலில்இல்லை. ஆந்திரா பிரதேசத்தில்முன்னர் தமிழ்நாட்டுடன்இணைந்திருந்த பகுதியில் இப்பொழுது மதுவிலக்கு அமுலில்இருந்து வருகின்றது.

இதனை ரத்துச் செய்துவிடவேண்டும் என்று ஏற்கனவே ஆந்திராபிரதேசகாங்கிரஸ் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் குழு முடிவு செய்திருக்கின்றது. இதன் பேரில் அடுந்த மாதம் 1-ம் திகதி தொடக்கம் மதுவிலக்கு ரத்துச் செய்யப்படவிருக்கின்றது.

## ஸ்ரீமதி பண்டிட் கவலை:

# ‘உலக உத்தமர் பாதையில் நாம் வழி நடக்கிருேமோ?’

வெள்ளவத்தை, புதன்

‘‘மிகவும் அழகு வாய்ந்த இலங்கைத் தீவிலே அமைதியான முறையில், அழகான கட்டிடங்களுடன் விளங்கும் இராமகிருஷ்ண மிஷனைக் காண்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உலக மக்களின் ஈடேற்றத்திற்காக நல்ல போதனைகளைப் போதித்த மகான் ஸ்ரீ இராமகிருஷ்ணர். இவரது பெருமை உலகம் பூராவும் பரவியுள்ளது சமீபத்தில் அமெரிக்காவுக்கு விஜயஞ் செய்தபோது அங்கு மக்கள் இவரது பெருமையைப் பாராட்டுவதையும் பூஜிப்பதையும் உணர்ந்தேன். லாஸ்ஏஞ்சல்ஸ்ஸிலும் இப்படித்தான். இவரை மாத்திரமல்ல --உலகம் உய்விக்க வந்த மகான்களாகிய புத்தர், விவேகானந்தர், இயேசு கிறிஸ்து ஆகிய பிறமதத்தினரும் உலக மக்களின் இதயங்களிலே நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார்கள்’’ என்று ஸ்ரீமதி பண்டிட் விஜயலக்ஷ்மி வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் புதிய மண்டபத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

‘‘இன்று உலகத்தை உய்விக்க வந்த உத்தமர்கள் என்று போற்றுகின்ற இத்தகைய மகாத்மாக்கள் போதித்த பாதையிலே நாம் வழிநடக்கிருேமா? நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டும் --வெறுமனே அவர்களது பெயர்களைச் சொல்லிக்கொண்டும் நாம் நினைத்தபடியெல்லாம் வாழ்ந்து முடித்து இந்த உலகின் அழிவுக்காகச் செயற்படுகின்ருேமா? இவற்றை நாம் முறையாகச் சிந்திக்கவேண்டும்.

### சமாதான சகவாழ்வு

அன்பு, சமாதானம், நேர்மையான வாழ்வு என்பன தான் முக்கிய அம்சங்கள். இன்று போர்க்கொடிஉயர்த்துகின்ற உலக நாடுகளும், அணுகுண்டு தயாரிக்கின்ற நாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு நாட்டு மக்கள் சந்திரனுக்கு மனிதனை அனுப்புகிருர்கள். இன்னெரு நாட்டு மக்கள் அதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் தமது பொருளாதார வாழ்வுக்கு வழிதேடிக்கொண்டிருக்கிருர்கள். உலக மக்களிடையே இவ்விதமான வேறுபாடுகள் இருக்கவே கூடாது மக்களுக்கு அழிவைத் தேடுகின்ற போரையும், கவலை தரக்கூடிய விஷயங்களையும் நான் மனதார வெறுக்கிறேன். சமாதான சகவாழ்வுதான் உலகிலேயே சிறந்த வாழ்வு.

### பெண்கள் முன்னேறவேண்டும்

ஒரு நாட்டின் வளர்ச்சியில் --அதன் சுதந்திரத்தில் பெண்களுக்கு மிக முக்கியமான பங்குண்டு. இந்தியாவில்கூடப் பெண்களுக்கு விடுதலை கிடைத்துவிட்ட...

...கித் தொண்டாற்றும்படியும் அழைப்பு விடுத்துள்ளார்கள்

### உண்மைய க வாழுங்கள்

காந்தி நூற்ருண்டுவிழாத் தினங்களிலே. இலங்கைக்கு விஜயஞ்செய்து உங்கள் மத்தியில் பேசுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். நான் ஒரு சாதாரண பெண்மணி தான். நான் ஒன்றும் போதிககவில்லை. ஆனுலும் எனது வார்த்தைகளில் ஏதாகிலும் உண்மையைஅறிந்துகொண்டீர்களாயின் அந்த உண்மைக்காக வாழுங்கள். அன்பும், சமாதானமும் நிரம்பிய உன்னத சமுதாயத்தைக் காண எனது அன்புக்குரிய இலங்கைச் சகோதரர்களாகிய நீங்கள் முயல வேண்டுமெனக் கேட்டு விடைபெறுகிறேன்.’’

## தி. மு. க. எம். எல். ஏ. காயம்

பரமக்குடி, அக். 8

பரமக்குடியை அடுத்துள்ள சித்தனேந்தல் என்னும் கிராமத்தில் நடைபெற்ற அண்ணு பிறந்தநாள விழாவுக்கு சென்று திரும்பிய தி. மு கழக எம் எல். ஏ. திரு. சிறைமீட்டான் கார் விபத்துக்குள்ளாஞர்.

இவர் கூட்டம்முடிந்ததும் நள்ளிரவில் ஒரு ஜீப் காரில் பரமக்குடியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார் இவருடன் பரமக்குடி வட்டாரச் செயலாளர் சுப. தங்கவேலன், பாண்டியூர் பஞ்சாயத்து தலைவர் மணி, காளிமுத்து, தேவகி பாண்டியன், சாமி ஆகியோரும் அக்காரில் இருந்தனர். இடைவழியில் ஜீப் கவிழ்ந்துவிழுந்தது. எல்லோரும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## இந்திய வெளிநாட்டு கொள்கை

நியுயோர்க், அக். 8

அல் அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டது சம்பந்தமாக மொராக்கோ தலைநகர் ரபாத்தில் நடைபெற்ற மகாநாட்டின்போது இந்திய தூதுக்குழுவுக்கு எதிரான நடவடிக்கைகளில் கலந்துகொண்ட சில நாடுகள் விஷயத்தில் இந்திய அரசின் கொள்கையில் மாற்றம் ஏற்...

## ‘தியாகியும் மேதையும்’

உடுப்பிட்டி, புதன்

காலஞ்சென்ற தியாகி தர்மகுலசிங்கம் (ஜெயம்) முன்னைநாள் பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் அமரர் திரு. பொன். கந்தையா ஆகிய இருவரினதும் வாழ்க்கை வரலாறு, அவர்கள் நாட்டுக்குப் புரிந்த சேவை, முதலியன அடங்கிய ‘‘தியாகியும், மேதையும்’’ என்னும் நூல் வெளியிடப்படவிருக்கின்றது.

வதிரி முற்போக்கு வாலிப முன்னணியால் வெளியிடப்படவிருக்கும் இந்நூலில் பல அரசியல்தலைவர்களின் கருத்துரைகளும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவருக்கு வட்டியில்லா கடன்

சென்னை, அக். 8

கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்குப் பதிலாக வட்டியில்லாக் கடன் கொடுப்பதுபற்றி தமிழக அரசு ஆலோசித்து வருவதாக கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

உபகாரச் சம்பளம் கொடுக்கும் திட்டத்தை மாற்றி அதற்குப் பதிலாக வட்டியில்லாக் கடன் கொடுப்பதுபற்றி...

# வல்லரசுபேச்சில்எகிப்துக்கு நம்பிக்கை இல்லை?

## எல்லை நெடுகிலும் போர் நடவடிக்கை

கெய்ரோ, அக். 8

வல்லரசுகள் நடத்திவரும் பேச்சால் யாதொரு பயனும் ஏற்படாது என்று எகிப்து கருதுவதால், போர்நிறுத்தக் கோடுநெடுகிலும், இஸ்ரேல் வசப்படுத்திக் கொண்டுள்ள பகுதிக்குள் நுழைந்து போர் நடவடிக்கைகளை எகிப்து கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகிறது.

இவ்வாறு போர் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன என்பதை, சென்ற வாரத்தில் கப்பல் மூலமாகவும், விமானம் மூலமாகவும் ஏற்றிஅனுப்பிவைக்கப்பட்ட எகிப்தியத்துருப்புகள், சினுய் பகுதியில் வெகுதூரம் புகுந்து, எதிரிகளின் படைநிலைகள் இருக்குமிடத்துக்குச் சென்றிருப்பதே எடுத்துக் காட்டுகிறது.

எகிப்து-இஸ்ரேல் போரில் ... மோதலை நெருங்கி வருகிறேருே அதற்கான விறுவிறுப்பு அதிகரித்து வருகிறது இனி அந்த மோதலைத்தவிர்க்க முடியாது’’ என்று அவர் மேலும் கூறுகிருர்.

சென்ற வாரம் இஸ்ரேல் பிரதமர் வாஷிங்டன் போய் வந்த பிறகு, போரைத்தவிர வேறுவழியில்லை என்ற உணர்ச்சிகெய்ரோவில்வலுவடைந்து வருகிறது.

அமெரிக்கா போயுள்ள எகிப்து அயல் நாட்டு மந்திரி முகமது ரியாத் நியூயோர்க்கிலிருந்து ‘‘அல் அஹ்ராம்’’ பத்திரிகைக்கு அளித்துள்ள ஒரு டெலிபோன்பேட்டியில், மத்தியகிழக்கு பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்படவில்லையென்று கூறியுள்ளார்.

மத்திய கிழக்கு சம்பந்தமாக ஐ.நா. வின் விசேஷப்...

## ஆகாகான் திருமணம்

லண்டன், அக். 8

இளவரசர் ஆகாகான் ஆங்கில மாது ஒருவரைத் திருமணம் செய்துகொள்ள விருக்கிருர், பாரிஸில் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகாகான் திருமணம் செய்யவிருக்கும் ஆங்கில மாதுக்கு வயது 24.

## 50 எம். எல். ஏ. ராஜினுமா

புதுடில்லி, அக், 8

பஞ்சாப் ராஜ்யத்தில் 50 காங்கிரஸ் கட்சி எம். எல் ஏ. க்கள் தங்கள் ராஜிநாமாக்களை மேலிடத்துக்குச் சமர்...

# எழுத்தாளர்களுக்கு வங்கி உதவி தேவை

## இந்திராவிடம் கோரிக்கை

சென்னை, அக். 8

சென்னையில் திருமதி இந்திராகாந்தியைத் தமிழ் எழுத்தாளர்கள் சந்தித்துப் பேசினுர்கள் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. பன்னீர்செல்வம் வரவேற்புரை நிகழ்த்துகையில், எழுத்தாளர்கள் தங்களது புத்தகங்களை அச்சிடுவதற்கு ‘வங்கிகள்’ கடன் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். திருமதி இந்திராகாந்திக்குத் தமிழ் எழுத்தாளர்களின் சார்பில் திருக்குறளின் ஆங்கில மொழி... செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திருமதி இந்திராவை தமிழ்நாடு மாணவர் பிரதிநிதிகளும் சந்தித்தார்கள். ‘‘மக்களில் பலர் இன்னும் மூடப்பழக்கங்களை நம்புகிருர்களென்றும் மாணவர்கள் தவருன கருத்துக்களை நம்பாமல் தாமாக சிந்தித்து முன்னேறவேண்டும்’’ எனத் திருமதி இந்திரா தமதுரையில் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டு மாணவர்கள் தமிழ், ஆங்கிலம், இந்தி என்ற மூன்று மொழிகளில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரத்தில் கப்பல் மூலமாகவும், விமானம் மூலமாகவும் ஏற்றிஅனுப்பிவைக்கப்பட்ட எகிப்தியத்துருப்புகள், சினய் பகுதியில் வெகுதூரம் புகுந்து, எதிரிகளின் படைநிலைகள் இருக்குமிடத்துக்குச் சென்றிருப்பதே எடுத்துக் காட்டுகிறது.

எகிப்து-இஸ்ரேல் போரில் இது ஒரு புதிய முக்கியமான மாறுதலைக் குறிப்பதாக ராணுவ விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இந்த நடவடிக்கைகள் படிப்படியாக அதிகரித்துவரும் என்று நாஸருடன் நெருங்கிய தொடர்புள்ள முகமது ஹஸேனின் ஹெய்க்கால் கூறியிருக்கிறார்.

''வரும் யுத்தம்'' என்ற தலைப்பில் அவர் 'அல் அஹராம்' பத்திரிகையில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் இவ்வாறு கூறுகிறார்.

''இறுதியான, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முகமது ரியாத் நியூயோர்க்கிலிருந்து ''அல் அஹ்ராம்'' பத்திரிகைக்கு அளித்துள்ள ஒரு டெலிபோன்பேட்டியில், மத்தியகிழக்கு பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்படவில்லையென்று கூறியுள்ளார்.

மத்திய கிழக்கு சம்பந்தமாக ஐ.நா.வின் விசேஷப் பிரதிநிதியாக இருந்துவரும் குணர் ஜாரிங், இன்னும் சிறிது காலம் நியூயார்க்கிலேயே தங்கியிருப்பார் என்றும், சமீபத்தில் அவர் செய்யக்கூடிய உருபடியான பணி எதுவும் இராது என்றும் அவர் இந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா புதிதாக ஒரு சமாதான திட்டத்தைத் தெரிவித்திருப்பதாக சில மேலைநாட்டு செய்தி ஸ்தாபனங்கள் அனுப்பி வைத்துள்ள தகவலையும் அவர் மறுக்கிறார்.

## 50 எம். எல். ஏ. ராஜினமா

புதுடில்லி, அக். 8

பஞ்சாப் ராஜ்யத்தில் 50 காங்கிரஸ் கட்சி எம். எல். ஏ.க்கள் தங்கள் ராஜினாமாக்களை மேலிடத்துக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

சண்டிகார் பிரச்னை மீது இந்த ராஜினாமா நடைபெற்றுள்ளது.

— —

## இந்திராவின் மகிழ்ச்சி

சென்னை, அக். 8

பெரிய கிளப்புகளில் மது பரிமாறுவதற்கு தமிழ்நாடு அரசாங்கம் அனுமதி மறுத்தது குறித்து தாம் மகிழ்ச்சியுறுவதாக திருமதி இந்திரா காந்தி திருச்சி விஜயத்தின் போது தெரிவித்தார்.

''காங்கிரசுக்கு நல்லஎதிர்காலம் இருக்கிறது என்பதில் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது. மேலும் படித்தவர்களும் பத்துஅம்ச பொருளாதாரத் திட்டத்தில் நம்பிக்கை உள்ளவர்களும் காங்கிரஸில் சேர்ந்து அதைப்பலப்படுத்த வேண்டும். என்னுடைய சுற்றுப்பயணத்தில் படித்தவர்களையும், விஞ்ஞானிகளையும் சந்தித்தேன். சென்னையிலும் சந்திக்க இருக்கிறேன்'' என திருமதி இந்திரா தெரிவித்தார்.

— —

பன்னீர்செல்வம் வரவேற்புரை நிகழ்த்துகையில், எழுத்தாளர்கள் தங்களது புத்தகங்களை அச்சிடுவதற்கு 'வங்கிகள்' கடன் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். திருமதி இந்திராகாந்திக்குத் தமிழ்எழுத்தாளர்களின் சார்பில் திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல பழைய முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் கொடுத்தார். திருமதி காந்தி ''நாட்டு முன்னேற்றத்துக்கு எழுத்தாளர்கள் தங்கள் எழுத்துமூலம் பணி முடப்பழக்கங்களை நம்புகிறார்களென்றும் மாணவர்கள் தவறான கருத்துக்களை நம்பாமல் தாமாக சிந்தித்து முன்னேறவேண்டும்'' எனத் திருமதி இந்திரா தமதுரையில் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டு மாணவர்கள் தமிழ், ஆங்கிலம், இந்தி என்ற மூன்று மொழிகளில் எந்த மொழியைப் படிக்க வேண்டுமென்று மாணவர்கள் அங்கலாய்க்காமல் மூன்று மொழிகளையுமே கற்கும்படி கூறினர்.

அல் அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டது சம்பந்தமாக மொராக்கோ தலைநகர் ரபாத்தில் நடைபெற்ற மகாநாட்டின்போது இந்திய தூதுக்குழுவுக்கு எதிரான நடவடிக்கைகளில் கலந்துகொண்ட சில நாடுகள் விஷயத்தில் இந்திய அரசின் கொள்கையில் மாற்றம் ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது.

இதுசம்பந்தமாக இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. தினேசிங் கருந்து வெளியிட்டிருக்கிறார்.

சிறந்த வாழ்வு.

### பெண்கள் முன்னேறவேண்டும்

ஒரு நாட்டின் வளர்ச்சியில் --அதன் சுதந்திரத்தில் பெண்களுக்கு மிக முக்கியமான பங்குண்டு. இந்தியாவில்கூடப் பெண்களுக்கு விடுதலை கிடைத்துவிட்டதாகவும், சுதந்திரத்தின் பின்னர் அவர்கள் பல துறைகளிலும் முன்னேறிவருவதாகவும் சொல்கிறார்கள். ஆனல் அங்கே பெண்கள் இன்னும் சரியாக முன்னேறவில்லை. அவர்களைப் பிணைத்துள்ள தேவையற்ற சமூகக் கட்டுப்பாடுகள் இன்னும் முற்றாக நீக்கப்படவில்லை. அதனுற்றான் காந்தியடிகள்கூடப் பெண்களை வெளியே வரும்படியும், சமுதாயப்பண்ணையில் இறங்கும்படியும் ...தார்.

கடன் கொடுப்பதுபற்றி தமிழக அரசு ஆலோசித்து வருவதாக கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

உபகாரச் சம்பளம் கொடுக்கும் திட்டத்தை மாற்றி அதற்குப் பதிலாக வட்டியில்லாக் கடன் கொடுப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசித்துவருவதாகவும், இத்திட்டத்தின்படி கல்லூரியில் படிக்கும்போது வசதிகுற்றநிலையில் இருக்கும் மாணவர்கள் அரசாங்கத்திடம் கடன்பெறலாம். அதை 20 ஆண்டு 40 ஆண்டு என்ற தவணைமுறையில் திரும்பக் கட்டலாம். இதற்கு வட்டி கிடையாது. இந்தத் திட்டத்தால் கல்வித்துறை மேலும் வளர்ச்சி பெறும் எனவும் தெரிவித்தார்.

# 'சமுதாய ரீதியில் முதலில் ஒற்றுமை ஏற்படவேண்டும்'

மட்டுவில், புதன்

''தமிழர் சமுதாய அடிப்படையில் ஒன்றுபட்டால் தான் அரசியல் ரீதியிலும் ஒன்றுபட முடியும்' எமது சமுதாய அடிப்படையில் ஒற்றுமை இல்லை என்ற பலவீனத்தை அறிந்து கொண்டதின் காரணமாகவே இன்று தமிழர்களை மதமாற்றம் செய்ய முனைகின்றனர் எனவே இக் கட்டத்தில் தமிழினம் முதன் முதலில் எமது சமுதாய அடிப்படையிலே ஏற்றத்தாழ்வுகள் இருப்பின் அவற்றை எமது மத்தியிலிருந்து தூக்கி எறிய வேண்டும்.

இவ்வாறு நுணுவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி வாலிப முன்னணிக்கிளை அங்குராற்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சாவகச்சேரி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் கூறினர்.

நுணுவில்வயிரவர்கோவில் முன்றலில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு சாவகச்சேரி நகரசபை 5-ம் வட்டார உறுப்பினர் திரு ஏ. சுப்பிரமணியம் தலைமை தாங்கினர். திரு. நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:-

எமது இலட்சியத்தை எமது ஏகோபித்த குரலினலும் போராட்டங்களினலும் தான் பெற வேண்டும்என்ற உண்மைகளை முதலில் அறிந்து கொண்டால்தான் நாம் என் ஒன்றுபட்டுழைக்க வேண்டும் என்பதையும், அவசியத்தையும் உணரமுடியும் என்றார்

அடுத்து திரு. எம். ஆலால சுந்தரம் பேசுகையில் நாம் எமது இனத்தினது உரிமைகளை தருவதற்கு எந்தக்கட்சி முன் வருகிறதோ அக்கட்சியுடன் ஒத்துழைப்பதற்குத் தயாராக இருக்கிறோம். எமது கட்சியின் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மந்திரிப் பதவியை என்றும் ஏற்க மாட்டார்கள் என்றார் அவர் அடுத்து திரு. எஸ். ஸ்ரீகாந்தராஜா வாலிப முன்னணிகளின் கடமை பற்றிப் பேசினர்.

——

## மாணவர்கள் காந்திவழியை பின்பற்ற வேண்டும்

சுருவில், புதன்

இம்மாதம் 4-ம் தேதி சுருவில் ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி பொருட்காட்சியொன்றும் விழாவும் நடைபெற்றது.

திரு. ஆ. யாதவராயர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மாணவ மாணவிகளின் நிகழ்ச்சிகளும் பெரியோர்களின் காந்தி பற்றிய அரிய அறிவுரைகளும் இடம்பெற்றன.

ஆசிரியர் திரு பொ. சோமசுந்தரம் பேசுகையில் மகாத்மாகாந்தியின் பாடசாலை வாழ்க்கை மாணவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியெனவும் மகாத்மாவுக்கு மாணவர் செய்யக்கூடிய நன்றி அவர்காட்டிய வழியில் நடத்தலேயாகும் எனவும் குறிப்பிட்டார்.

— —

## பொருட் காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், வியாழன்

மயிலிட்டி கிராம அபிவிருத்தி மாதர் சங்கமும், தையல் பகுதி மாணவிகளும் சேர்ந்து இம்மாதம் 10-ம் திகதியிலிருந்து 3 நாட்களுக்கு மயிலிட்டி வை. எம். சி. ஏ. மண்டபத்தில்கைவினை பொருட் காட்சியையும் விற்பனையையும் நடத்தவிருக்கின்றனர். இவ்வைபவத்தை யாழ். மாவட்ட சமூகசேவை நிர்வாக உதவியாளர் திரு. என். சிவசிதம்பரம் திறந்துவைப்பார்.

(கா. நி)

பதில் நடவடிக்கை

# அரபு நிலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல்

கெய்ரோ. அக். 8

நான்கு இஸ்ரேலிய விமானங்கள் நேற்று அரபுக் குடியரசுப் பிராந்தியங்களில் தாக்குதல் நடத்தியது இருதரப்பு விமானங்களும் கடுமையாக மோதிக் கொண்டன.

தாக்குதல் நடத்தியபின் தங்கள் விமானங்கள் பத்திரமாகத் திரும்பி விட்டதாக இஸ்ரேலியர் அறிவித்தனர் தடைப்படைகளும் கடுமையான பீரங்கிச் சண்டையில் இறங்கியிருக்கிறார்கள் இருதரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

### ஜோர்டானில்

ஜோர்டான் கிராமங்களின் மீது இஸ்ரேலியர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இஸ்ரேலிய விமானங்கள் பலமாகக்குண்டுவீச்சில்இறங்கியதாகவும் ஜோர்டானிய பீரங்கிப்படையில் அவைகளைத் துரத்தியடித்ததாகவும் கூறப்பட்டது.

### லெபனன் புகார்

லெபனன் கிராமங்களில் இஸ்ரேலிய சிப்பாய்கள் ஊடுருவியதாகவும் பல கிராமவாசிகளைக் காயப்படுத்திவிட்டு சிலரைக் கடத்திச் சென்றதாகவும் லெபனன் ஐ. நா. பாதுகாப்புச்சபையில் புகார் கூறியிருக்கின்றன

ஹெலிகெப்டர்கள் மூலம் இஸ்ரேலியச் சிப்பாய்களை இறக்கியதாகவும் லெபனன் புகார் கூறியிருக்கின்றது.

## தியாகிகளுக்கு உதவி

சென்னை, அக். 8

சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்ட காங்கிரஸ் தியாகிகளும், நேதாஜியின் படையில் பணிபுரிந்தவர்களும் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து அவரிடம் கோரிக்கை மனு ஒன்றைச் சமர்ப்பித்தனர். அந்த மனுவில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் 50 ரூபா உதவிப் பணத்தை 100 ரூபாவாக மாற்றும்படியும், அரசாங்க விழாக்களில்கலந்துகொள்ள மாநில அரசுகள் அழைப்புகள் அனுப்பவேண்டுமெனவும், முக்கிய தலைவர்களின் சுற்றுப்பயண அறிக்கை விடுதலை வீரர்களின் சங்கத்துக்கனுப்பப்படவேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவைப் பெற்றுக்கொண்ட திருமதி இந்திரா தமதுரையில், உதவித்தொகையை உயர்த்துவது பற்றித் தாம் இப்பொழுது ஒன்றும் கூறமுடியாது என்றும், உதவிப்பணம் பெறுபவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் மத்திய அரசின் நிதி வசதியைப் பொறுத்துமே கவனிக்க முடியுமெனத் தெரிவித்தார்,

## 'வாழ்வுக்கு ஒரு பெரிய விளையாட்டு'

உடுப்பிட்டி, புதன்

''மனிதன் உலகில் எப்படி வாழவேண்டும் என்று முன்மாதிரியாக இருந்து தங்கள் வாழ்க்கை மூலம் புகட்டுதலே அவதார புருஷர்களின் முதற்கடமை. ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஹ்ருஷீகேசன் என்று ஒரு பெயர். இந்திரியங்களுக்கெல்லாம் ஈசன என்பதே அதன் பொருள். உடல் ஞாபகத்தைக் கடந்து மேலே செல்லுதலே மானிட வாழ்க்கையின் மேலானஇலட்சியமாகும். உலகம் ஒரு விளையாட்டு மேடை; வாழ்வு ஒரு பெரிய விளையாட்டு விளையாடுவது போன்று வாழ்வை எளிதாக்குபவர்க்கு அது கொண்டாட்டம். மற்றவர்களுக்குத் திண்டாட்டமாகும்''.

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீசாரதாநிலைய சேவாச்சிரமப் பொதுச் செயலாளர் திரு இரத்தினசபாபதி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்கோவிலில் நிகழ்த்தியசொற்பொழிவில் குறிப்பிட்டார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நம் காரியங்கள் எல்லாவற்றிலும் சொந்த விஷயத்திலாகட்டும் அல்லது பொதுத்துறையிலாகட்டும் நாணயத்திற்கு முதலிடம் அளிப்பதே நம் சலாச்சாரத்தின் சாரமாகும். — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதி மாதம் 23-ந் திகதி (9 - 10 - 69)


## ஸ்ரீமதி பண்டிட்டின் வருகை

யாழ்ப்பாணத்துக்குவருகை தந்துள்ள இந்தியாவின் தவப்புதல்விகளில் ஒருவரான திருமதி விஜயலட்சுமி பண்டிட் இன்று முற்பகல் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் இலங்கை மகளிர் சேவா சதனம் அளிக்கும் வரவேற்பின் போது சக்திசேனையைத் தொடக்கி வைக்கவிருக்கிறார் சக்திசேனையைத் தொடக்கி வைப்பதற்கு ஸ்ரீமதி விஜயலட்சுமியைவிடப் பொருத்தமானவர் யார்? சக்திசேனைத் தொடக்கமும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டின் யாழ்ப்பாண வருகையும் இங்கு மங்கையர் மத்தியில் புதிய உற்சாகத்தையும் நம்பிக்கையையும் அளிக்குமென எதிர்பார்க்கலாம்.

ஸ்ரீமதி விஜயலட்சுமி இந்திய சுதந்திரப் போராட்டங்களில் கலந்துகொண்ட வீராங்கனை; தேசபக்தை; அரசியல் தலைவி; சமூகசேவகி; ராஜதந்திரி உலக அரங்கான ஐ. நா. பொதுச் சபைக்குத் தலைமைதாங்கிய முதலாவது பெண்மணியும் ஸ்ரீமதி விஜயலட்சுமிதான். உலகப்புகழ் பெற்ற மாதரசி. சமூகத்துக்கும், நாட்டுக்கும் உலகசமாதானத்துக்கும் பெண்கள் எப்படி அரும்பெரும் சேவை செய்யமுடியுமென்பதற்கு ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

இலங்கையில் ஒரு பெண் பிரதமராகப் பதவிவகித்திருக்கிறார் ஆட்சிமன்றத்தில் எதிர்க்கட்சியிலும் அரசாங்கத்தரப்பிலும் ஒரு சில பெண்கள் அங்கம்வகிக்கின்றனர். சமூக, சமய சேவைகளில் நமது நாட்டுப் பெண்கள் ஈடுபட்டுப் பணியாற்றுகின்றனர். நமது நாட்டிலுள்ள தமிழ்ப் பெண்களும் சமூக சமய சேவைகளில் சளைத்தவர்களல்லர். உரிமைப் போராட்டங்களிலும் சத்தியாக்கிரக இயக்கங்களிலும் தமிழ்ப்பெண்கள் முன்னணியில் நின்றதையாரும் மறந்துவிடமுடியாது. அரசியல் அறிவிலும் தமிழ்ப்பெண்கள் யாருக்கும் சளைத்தவர்களல்லர். ஆனாலும் அரசியலில் தீவிரமாக ஈடுபடுவதற்குத் தமிழ்ப் பெண்கள் முன்வருவதாகத் தெரியவில்லை; அதேசமயம் அவர்களைத்தீவிர அரசியலில் ஈடுபடுத்தி அவர்களது சேவையை நாட்டுக்கும் சமூகத்திற்கும் பயன்படுத்த ஆண்கள் இடையூறாக இருக்கின்றனர் என்றும் சொல்வதற்கு இடமுண்டு. யாழ்ப்பாண மாநகரசபையில் இப்போதுதான் ஓர் பெண் அங்கம் வகிக்கிறார். ஆட்சி மன்றத்திற்கு ஒரு தமிழ்ப் பெண்ணாவது இதுவரை அனுப்பப்படவில்லை

சக்தியின் வடிவம் பெண். அமைதியும் பொறுமையும் நிதானமும் பெண்களிடம் இயல்பாகவே குடிகொண்டுள்ள குணம்சங்கள் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டின் யாழ்ப்பாண விஜயம் அவரது நல்லுரைகள் யாழ்ப்பாணப் பகுதியில் புதியதொரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த உதவவேண்டும். தமிழ்ப் பெண்கள் சமூகத்துக்கும் நாட்டுக்கும் அரசியல் உட்பட சகல துறைகளிலும் தீவிரமாக ஈடுபட்டுச் சேவைசெய்வதற்குத் துணிச்சலுடன் முன்வரவேண்டும், ஆண்களும்இதற்குவழிவகுத்துக்கொடுக்க வேண்டியது அவர்களின் கடமையும் பொறுப்புமாகும.

ஆசிரியருக்குக் கடிதம்

# தமிழர் சிங்களம் படிப்பதால் ஆபத்து

‘சிங்களப்படிப்பு’ என்ற ... என்பதல்ல. அன்று ஆங்கில ...

# உலக சமாதானத்துக்கு வாழ்வை அர்ப்பணித்த ஸ்ரீமதி விஜயலட்சுமி

பெண் குலத்துக்குப் பெருமை தேடிக் கொடுத்த மாதரசி ஸ்ரீமதிபண்டிட் விஜயலட்சுமி முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் காலடி வைத்திருக்கிறார்.

காந்தி மகான் காட்டிய பாதையில் நின்று, உலக சமாதானத்திற்காக தன் வாழ்வை அர்ப்பணித்து, லட்சிய வாழ்வு வாழும் இவரின் யாழ்ப்பாண வருகை இங்கு வாழும் சகல இனமக்களிடையேயும் சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்குமென நம்பலாம்,



பதவிகள் மூலம் இந்தியாவுக்கும், பெண்குலத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்தார்.

உத்தரப்பிரதேச சட்டசபைக்கு 1936லும் 1964லும் இவர் தெரிவு செய்யப்பட்டார். உத்தரப்பிரதேச அமைச்சரவையில் உள்ளூ... நாடுகளிலும் இவருக்கு 16 டாக்டர் பட்டங்கள் கிடைத்திருக்கின்றன, வேறு பல பட்டங்களும் இவருக்குக் கிடைத்துள்ளன. பல சர்வதேசப் பரிசுகளையும் இவர் பெற்றிருக்கிறார்.

சிறந்த பேச்சாளர், இவருடைய பேச்சின் ஒவ்வொரு வார்த்தையிலும் விலை மதிக்கமுடியாத பல கருத்துக்கள் அடங்கியிருக்கும். ஐ. நா. சபையில் தன் கவர்ச்சிப் பேச்சால் உலகநாட்டுத் தலைவர்களை எல்லாம் கவர்ந்திருக்கிறார்.

‘‘உலகத்திலுள்ள மக்கள் எல்லாரும் சமாதானமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழவேண்டும். அவர்களிடையே பாகுபாடு இருக்கக்கூடாது, இவர்கள் எல்லாரும் ஒன்றுபட்டு வாழ உழைப்பதே என் லட்சியம்.’’

இலங்கையில் காலடி எடுத்துவைத்தபோது விஜ...

# யாழ்ப்பாண விஜயம் சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்ச்சி

இலங்கையில் காந்தி நூற்றுண்டுவிழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக காந்தியடிகள் அவதரித்த பாரதத்திலிருந்து மகாத்மாவின் போதனைகளையும், மனிதகுலம் நிம்மதியாக வாழ அவர் உலகுக்கு அளித்த சிந்தனைகளையும் சுமந்துகொண்டு ஈழம் வந்த பண்டிற் அம்மையார் யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயம் செய்திருப்பது இங்குவாழும் மக்கள், குறிப்பாக பெண் குலத்தின் பாக்கியம் என்றே சொல்லலாம். இவரது யாழ்ப்பாணத்து விஜயம் யாழ்ப்பாண சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகக் கருதலாம்.

உலகம் இருக்கும் வரை வாழும் புகழ்மிகு மனிதரான மறைந்த மேதை, பஞ்சசீலக்கொள்கையின் தந்தை ஜவர்ஹர்லால் நேருவின் வின் சகோதரியும், அஞ்சா நெஞ்சுடனும் நெஞ்சுடனும் எதிர்ப்பு எதுவாயிருந்தாலும் சமாளிக்கக் கூடிய திறன் மிக்கஇருபதாம் நூற்றுண்டு வைராக்கியம் மிக்க பெண்ணான இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்... ராட்சி சுகாதார அமைச்சராசுக் கடமையாற்றியிருக்கிறார்.

அகில இந்திய மாதர் மகாட்டின் தலைவியாக இவர் 1940ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். மாதர் சர்வதேச லீக்கின் உபதலைவியாகவும் பங்குபற்றியிருக்கிறார்.

### கணவர் பிரிவும் காந்தி கடிதமும்

1944 ம் ஆண்டு திருமதி பண்டிற்றுக்கு மறக்க முடியாத ஒரு ஆண்டாகும். தன் நாட்டை எவ்வளவு தூரம் நேசித்தாரோ, உலகத்தை எவ்வளவு தூரம் நேசித்தாரோ அதேயளவுநேசித்த ஒரு தனிமனிதர் தன் கணவர் இறந்த போது, அப்பிரிவை அவரால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை தனது லட்சியத்துக்கும், கொள்கைகளுக்கும் ஏற்றவராக வாழ்ந்த தன் கணவர் பிரிவினால் வாடிக் கொண்டிருந்த போது காந்திமகான் சிறையிலிருந்து அனுப்பிய கடிதம் பெரிய ஆறுதலளிப்பதாவும், ... இருந்தது.

‘‘உங்கள் கணவர் ...

...யலட்சுமி பண்டிட் முதல் முதலாக உதிர்த்த முத்துக்கள் இவைதான். யாழ்ப்பாணப் பகுதிக்கு அவர் விஜயம்செய்துள்ள இந்நேரத்தில் அவர் தெரிவித்த மேற்படி கருத்துக்களை யாழ்ப்பாணத்து மக்கள் மனதில் பதித்துக்கொள்ளத் தவறக் கூடாது.

காந்தி நூற்றுண்டு விழாவையொட்டி இங்கு வந்துள்ள ஸ்ரீமதி பண்டிட்டின் கருத்துக்களை மனத்திற்கொண்டு நம்மிடையே உள்ளவேற்றுமைகளைக்களைந்து, ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழச் சங்கற்பம் பூணுவோம்

—பாமா,

### பரிசு

உடுப்பிட்டி, புதன்

வடபகுதியில் அரசாங்கத்தால் கையேற்கப்பட்ட மூன்று தமிழ் பௌத்த பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ்‘பரிசு’வழங்கி உள்ளது. கரவெட்டி ஸ்ரீநாரததமிழ் பௌத்த பாடசாலை, அல்வாய் ஆனந்த செமகேதமிழ்...

## இருளில் மந்திகை ஆஸ்பத்திரி

புலோலி, புதன்

மந்திகைஅரசினர் ஆஸ்பத்திரியில் இரவுவேளையில் அடிக்கடி ஏற்படும் மின்சாரக்கோளாறினுல் ஆஸ்பத்திரி இரவுவேளைகளில் இருள்மயமாகக் காட்சியளிக்கிறது. இதனுல் நோயாளர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். குறிப்பாக பிரசவத் தாய்மார்கள் வெளிச்சம் இல்லாததால் அயலிலுள்ள கடைக்காரர்களின் உதவியை நாடவேண்டியுள்ளதாம். மின்சாரக்கோளாறு ஏற்படும் காலங்களில் அதனைச் சமாளிக்க மாற்று வழியேதும் உபயோகிக்கப்படாத தால் இங்கு கடமையாற்றும் ஊழியர்களும், டாக்டர்களும் பெரிய சங்கடத்துக்குள்ளாகிறார்கள். மின்சாரக் கோளாறு ஏற்பட்டால் மெழுகுதிரியின்உதவியையே நோயாளர்கள் நாடுகின்றனராம்.

## ‘‘மகாத்மா பாதையில் செல்வோம்’’

நெடுந்தீவு, வியாழன்

‘‘காந்திமகான் எந்தலட்சியத்துக்காகவாழ்ந்து மறைந்தாரோ அதற்காக நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அவர் போதனைகளை நாம் கடைபிடித்துச் செல்வோமானுல்நாட்டில்அடாத செயல்களுக்கு இடமே இல்லை’’ என்று நெடுந்தீவு சனசமூக நிலையத்தில் நா. இலட்சுமணராசாவின் தலைமையில் நடைபெற்ற காந்தி விழாவில் திரு. வே. நடராசா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ‘‘காந்திமகான் பட்டப் படிப்புக்காக இங்கிலாந்து சென்றபோது அவர் கொண்டிருந்த லட்சியத்தைஇம்மியளவுகூடத் தவறவில்லை அதே போல் நாமும் நமது லட்சியத்தில் இருந்து தவறக் கூடாது’’ என்று குறிப்பிட்டார்.

## சிரமதானம்

நாவற்குழி, புதன்

நாவற்குழி சித்தி விநாயகர் ஆலயத்திற்கான புதிய வீதி ஒன்றினை நாவற்குழி சனசமூக நிலையத்தினரும் ...

# ஜயாறன் எழுதுவது

புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலே மகாத்மா காந்தியின் நூற்றுண்டுவிழா மிகச் சிறப்பாக நடந்தது. கைத்தறிப் புடவை, கைப்பணிக் காட்சியிலே மனதைக் கவரக்கூடிய விதவிதமான சேலைகளும், வேட்டி முதலியனவுமிருந்தன.

ஒரு பெரிய குறை. மகாத்மாவுக்கு உகந்த கதர்த் துணிகள் அங்கு இல்லாமைதான். கைத்தறிப் புடவைக்கான நூல்கள் பெரும்பாலும் வெளி நாடுகளிலிருந்தே வருகின்றன. இங்கேயே பருத்தியை உற்பத்திசெய்து, நூல் நூற்று, அதைக்கொண்டு துணிகளை நெய்வதுதான் கதர்த்துணி. ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் தூய கதர் புடவையை உடுத்தியிருந்தது எவ்வளவு நேர்த்தியாக இருந்தது!

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக இங்கு மகாதமா வந்தபோது ‘ஆடோகிராப்’ புத்தகத்தில் கையெழுத்திடும்படி பல வாலிபர்கள் அவரைக்கேட்டதற்கு அவர் ஒரு நிபந்தனை கேட்டாராம். இனிக் கதரே உடுத்துவதாக உறுதிமொழியளித்தால் கையெழுத்திடுவதாகக் கூறவே ‘சரி’ என்ற பல வாலிபர்கள் உறுதிமொழி கூறிக் கையெழுத்தைப் பெற்றனர்.

பக்கத்திலிருந்த ராஜாஜி சிரித்துக்கொண்டே ‘‘இவர்கள் இவ்வுறுதிமொழியைக் காக்கமாட்டார்கள். ஏன் என்றால், கதர் உடுத்துவதாயின் இவர்களுக்குச் சீதனத்துடன் தக்க இடத்துப் பெண் கிடைக்காது’’ என்றாராம். அவர் கூறியது போலவே உறுதிமொழி அளித்த வாலிபர்களில் பலர் அதை நிறைவேற்றமுடியாமல் ‘குற்றவாளி’களாக உணர்கின்றனர். ஆனால் சிலர் இன்றும் உறுதியுடன் கதர்ஆடையே அணிவதைப் பார்க்கிறேன்.

கதர் இயக்கத்தை மகாத்மா அவ்வளவு வற்புறுத்தினார். சிறைக்குச் செல்லும் போதெல்லாம் ‘கதர் கதர்’ என்ற மந்திரத்தையே சொல்லிச் சிறை புகுந்தார்

இக்காலத்திலே கதரிலே மிகமிக நேர்த்தியான துணிகள் இந்தியாவில் உற்பத்தியாகின்றன. இலங்கையிலும் கதரை உற்பத்திசெய்ய அரசாங்க கைத்தொழில் இலாகா ஏன் முயலக்கூடாது? இதனுல் மகாத்மாவின் உள்ளம் குளிருவதுடன் இங்கும் பல ஏழைகளுக்கு வருமா...

அன்றைய கூட்டத்தை, மகாத்மாவின் தலைமையில் நடந்த சர்வ சமய மகாநாடென்றால் அது பொருத்தமாகும். சைவம், பௌத்தம், கத்தோலிக்கர், கிறிஸ்தவர், இஸ்லாம் முதலிய பல சமயக் குருமார்களும் அதில் கலந்துகொண்டு மகாத்மாவையும் அவரது சமரசப்போக்கையும் உபதேசங்களையும் போற்றினர். தாம் பிறந்த குஜராத் ராஜ்யத்திலே கொடிய கலகங்கள் சமயத்தின்பெயரால் நடக்கையில், ஈழத்தில் புங்குடுதீவிலே எல்லாச் சமயத் தலைவர்களும் ஒரே மேடையில் கூடிச் சமயசமரசத்தை வற்புறுத்துவதைக் காண மகாத்மா எவ்வளவு சந்தோஷப்படுவார்!

இலங்கை சிறிய தீவாயினும் பாரத நாட்டுக்கும் நாம் வழிகாட்டமுடியும் என்று அன்றைய கூட்டம் சொல்லாமற் சொல்லியது.

0 0 0

பள்ளிக்கூடங்களில் இவ்வித கூட்டங்கள் நடக்கும் போது முன்னே ஏராளமான குழந்தைகள் இருப்பது வழக்கம் தலைவர் பேசுகையில், குழந்தைகள் தங்களுக்குள் பேசிக்கொண்டு இருப்பர். அன்று குழந்தைகளின் கவனத்தையும் திருப்பும் முறையில் குன்றக்குடி அடிகளாரும், ஒரு கிறிஸ்தவ குருவும் கதைகளைச் சொல்லியும், கேள்விகள் கேட்டும் வெற்றிகரமாகப் பேசி, குழந்தைகளின் மனதிலும் காந்திய தத்துவங்களைப் பதியச்செய்தது போற்றத்தக்கதாகும்.

0 0 0

நல்லார்கள் சேர் புகலி
ஞானசம்பந்தனல்ல,
எல்லார்களும் பரவும்
ஈசனையேத்து பாடல்,
பல்லாரகளும் மதிக்கப்
பாசுரம் சொன்ன
பத்தும்,
வல்லார்கள் வானோருலக
ளவும் வல்ல ரன்றே
திருஞானசம்பந்த
சுவாமிகள்

## ஊழியர்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்கள்

கோட்டை, புதன்

கடற்றொழில் கூட்டுஸ்தாபனம் வேலைநிறுத்தத்திலீடுபடாத தமது ஊழியர்கள் அனைவருக்கும் அவர்கள் சேவையைப்பாராட்டி நற்சாட்சிப் பத்திரம் வழங்கியுள்ளது.

## பலாத்காரத்தை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதம்

# தமிழர் சிங்களம் படிப்பதால் ஆபத்து

'சிங்களப்படிப்பு' என்ற தலைப்பில் வெளிவந்த தலையங்கம் பலரது சிந்தனையையும் தூண்டியிருக்கிறது. சிங்களத்தை தமிழர் படிக்கக் கூடாது என்று தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியுமான திரு வ. நவரத்தினம் எழுதியதை நாம் இதே பக்கத்தில் பிரசுரித்து வாசக நேயர்களின் கருத்துக்களை வரவேற்பதாகத் தெரிவித்திருந்தோம். உத்தியோக மொழி காரணமாக அரசாங்க சேவையிலிருந்து வெளியேறிய திரு. நா. க. பத்மநாதன் தமது கருத்தை இங்கு கூறுகிறார்.

சிங்களமே இப்போது இந்நாட்டின் ஆட்சிமொழியாக இருக்கிறதென்றும் தமிழ்த் தலைவர்கள் சிங்களம் படிப்பதை ஒப்புக்கொண்டுள்ளனரென்பதை மறப்பதற்கில்லையென்றும் சிங்களத்தை ஆட்சிமொழியாக்கியுள்ள இந்த அரசியல் அமைப்பிலே இவர்கள் சேர்ந்து ஒத்துழைத்துள்ளனரென்பது குறிப்பிடத்தக்கதென்றும் "ஈழநாடு" பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆகவே அரசாங்கத்திலோ, கூட்டுத்தாபனங்களிலோ தமிழர் வேலைவேண்டுமென்று ஆவல் கொண்டிருப்பின் சிங்கள மொழியில் தேர்ச்சியும் திறமையுமிருக்கவேண்டுமென்பது இன்றியமையாததாகின்றது. இவ்விதமான நிலையில் அரசாங்கவேலை பெறுவதற்கோ அல்லது அரசாங்க சம்பந்தமுள்ள ஸ்தாபனங்களில் வேலைபெறுவதற்கோ சிங்களம் படிக்கத்தேவையில்லை என்று யாரும் கூறின் அது களுக்கும் ஆசைமிகைக்கும் ஆசை என்பது போலாகும் எனத்தொடர்ந்தும் "ஈழநாடு" தன் கருத்தை வெளியிட்டிருந்தது.

ஓர் இனம் அல்லது நாட்டின் அரசாமிலை இன்னொருவரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு அதுவே சிலகாலம் நீடித்து நிற்கிறதென்றால் அவ்விதம் நீடித்து நிற்கும் அநீதியும் அடக்குமுறையுமே நிறைவேறியங்கும் அறமூட்சி என்பதல்ல. அன்று ஆங்கில ஆதிக்கம் இந்திய துணைக்கண்டம் முழுவதும் அரசோச்சியது. அதற்காக அதனையே அண்ணல்காந்தி அரசென ஏற்றிடவில்லை. அதுபோல மேலோங்கி நிற்கின்ற ஒரு காரணத்துக்காக அதுவேசரி என நாம் எதையும் ஏற்றிட வேண்டியதில்லை. தனிச் சிங்களச் சட்டமும் எதுவிதத்திலும் விதிவிலக்கல்ல.

தமிழ்த்தலைவர்களின் ஏகோபித்த விருப்புடன் சிங்களச் சட்டம் இயற்றப்படவில்லை. இதுபாரபட்சமானது, அநீதியானது, தமிழினத்தின் விழியாம் மொழியை இது பறித்தெடுக்கும் என வெளியுலகும் அறியும் வகையில் பாராளுமன்றத்தில் எம் தலைவர்கள் எழுப்பிய குரலும் தமிழினம் திரண்டெழுந்து நடாத்திய அறவழி எதிர்ப்புகளும் இதற்குள் நாம் மறப்பதோ மறைப்பதோ முறையாகாது, நெறியாகாது. எனவே ஆட்சிமொழியாகி விட்டது என்பதற்காக அதுவே இனி வழியென எவரும் கருதிட வேண்டியதில்லை.

விடுதலைக்குவித்திடும்வகையில் இயன்றளவு பாடுபட்டோம். அடுத்தவேண்டிய அரசியல் அமைப்புக்கும் தமிழ்த்தலைவர்கள்சிலர் நம்பி அரும்பணி புரிந்தனர் என்பதற்காக தமிழ் இனத்துக்குரிய பின்னர் புகுத்தப்பட்ட தனிமொழிச்சட்டமே என்பதும் இதற்கே முன்னைய தலைவர்கள் விரும்பிப் பாடுபட்டனர் என்பதும் முறையேயல்ல.

இவைநிற்க, அந்நியரின் ஆட்சியிற்கூட அன்று எல்லாத்தொழிலுக்கும் ஆங்கிலம் தெரிந்திருக்கவேண்டுமென்றிருந்ததில்லை. இன்றோ தமிழ்ப்பிள்ளைகளுக்கு தமிழில் நெசவு சொல்லிக்கொடுக்கும் தமிழ்ப்போதனாசிரியருக்குக்கூட சிங்களத் தேர்ச்சி ஒரு கட்டாய நிபந்தனையாக்கப்பட்டிருக்கிறது. இதில் சித்தியடையாதவருக்கு சம்பள உயர்வு இல்லை, இறுதியில் வேலையும் இல்லை. இந்நிலை தமிழ்ப்பகுதியிலேயே வேலைசெய்யும் தமிழ் கிராமசேவகர், தமிழ் தலைமையாசிரியர் உட்பட சகல அரசாங்க ஊழியர்க்கும் சிங்களம் கட்டாய நியமனநிபந்தனையாய் விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இவர்கள் உள்ளாகும் இன்னல்கள் கொஞ்சமல்ல. இதனுல் எத்தனையோ பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் கம்

அடுத்த உயர்பதவிக்குரிய படிப்பினை வெறுத்து சிங்கள மூன்ருந்தர, ஐந்தாந்தர சோதனைக்கே தம்மைத் தயார்செய்யவேண்டியவர்களாகின்றனர். இவைதான் நாம் விடுதலையடைந்ததன் பயனு, இதை விட கூட்டுத்தாபனம் என்ற பெயரிலே மீன் பிடித்தொழிலிலிருந்து பஸ்ஓட்டும் தொழில்வரை யாவும் அரசாங்கஉத்தியோகங்களாக்கப்படுகின்றன. சிங்களம் ஆட்சிமொழி எனவே இவை யாவற்றிற்கும் சிங்களத் தேர்ச்சியும் திறமையும் கட்டாய நிபந்தனையாம். இவையேவிடுதலையின் பெயரில் தமிழர்க்கு வழங்கப்படும் நீதியும் நியாயமுமாம்.

அநீதி தலையோங்குவதால் அது நீதியாகிவிடாது. அடக்குமுறையையோ அடிமைத்தனத்தையோ ஏற்பதால் அது வாழ்வுக்கு வித்திட்டுவிடமாட்டாது. உரிமை பெறப்பட்டபின்புதான் உறவு வளரும், பாரபட்சம் அமைதியை வளர்க்காது, கொந்தளிப்பையே ஏற்படுத்தும். முழங்கியதலைவர்கள்சிலர்தக்க சமயத்தில் குரல் மாறிக்கொடுப்பதும் மௌனம்சாதிப்பதும் தகைமையாகாது. ஆட்சிமொழியாகிவிட்டது, அரசாங்க மதமாகிவிட்டது என்பதற்காக அவற்றையே நாடுவது வாழ்வுக்கல்ல, தாழ்வுக்கே வழிகோலுவதாய் முடியும்.

நா. க. பத்மநாதன்,
8-10-69. புங்குடுதீவு

சசிலக்கொள்கையின் தந்தை ஜவர்ஹர்லால் நேருவின் சகோதரியும், அஞ்சா நெஞ்சுடனும் நெஞ்சுடனும் எதிர்ப்பு எதுவாயிருந்தாலும் சமாளிக்கக் கூடிய திறன் மிக்கஇருபதாம் நூற்றுண்டு வைராக்கியம் மிக்க பெண்ணுன இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மாமியாருமான ஸ்ரீமதி பண்டிற் தனது சகோதரர் நேருபோலவே இந்தியாவில் மட்டுமல்லாது உலக நாடுகளிலும் புகழ் பெற்றவர்.

## சிறைசென்ருர்

மகாத்மாவின் போராட்டங்களில் நேரடியாகப் பங்குபற்றி பண்டிற் அவர்கள் சிறைவாசம் அனுபவித்திருக்கிருர்கள். மகாத்மா காந்தியின் சட்ட மறுப்பு இயக்கத்தில் இவர் கலந்துகொண்டு மூன்றுதடவைகள் சிறைவாழ்க்கையை அனுபவித்திருக்கிருர். 1932 1941, 1942ம் ஆண்டுகள் இவர் சிறை வாழ்வு அனுபவித்த காலங்களாகும்.

## அதிக பதவிகள் வகித்தபெண்

அதிக பதவிகள் வகித்த பெண்மணி என்றும் இவரைக்கூறலாம். தான்வகித்த

களுக்கும் ஏற்றவராக வாழ்ந்த தன் கணவர் பிரிவிஞல் வாடிக் கொண்டிருந்த போது காந்திமகான் சிறையிலிருந்து அனுப்பிய கடிதம் பெரிய ஆறுதலளிப்பதாவும், புதிய உற்சாகத்தையும் அளிப்பதாக இருந்தது.

''உங்கள் கணவர் மறைவை அறிந்தேன்; ஆனுல் உங்களுடன் சேர்ந்து அதற்காகத் துக்கப்படமாட்டேன். உங்களுக்காகத் துக்கப்பட எனக்கு எங்கே துணிவு இருக்கிறது. துணிவுமிக்க ஒரு தந்தையின் மறைவுக்காக துணிவுமிக்கசகோதரனின் தங்கைக்காக, துணிவுமிக்க ஒரு கணவனின் மனைவிக்காகஒருவன் துக்கப்படமாட்டான். உங்களுக்குள்ளேயே உங்கள் தைரியம் இருப்பதை நீங்களே உணர்வீர்கள்.''

காந்திமகான் எழுதிய இந்தக் கடிதம் கலங்கியிருந்த பண்டிட் அம்மையாரை மீண்டும் எழுந்து இயங்கச்செய்தது.

## ஐ. நா. வில் முதல் பெண்மணி

ஐ நா. சபையில் இந்திய தூதுக்குழுவின் தலைவியாக 1946, 1947, 1963-ம் ஆண்டுகளில் பணியாற்றியிருக்கிருர். உழைப்பால் உயர்ந்த சோவியத்தில் 1947-ம் ஆண்டிலிருந்து 1949-ம் ஆண்டுவரை இந்தியாவின் தூதராகப் பணியாற்றி கவர்ச்சியும் இனிமையும் மிக்க பேச்சாலும், பழக்கவழக்கத்தாலும், செயற் திறனுலும் அந்நாட்டு மக்களைக் கவர்ந்தார்.

ஐ. நா. வில் பதவி வகித்த முதல் பெண்மணி என்ற பெருமையும் இவரையே சாருகிறது. ஒரு ராஜ்யத்தின் கவர்னராகவும் இருந்த பெருமையும் இவருக்கே உண்டு. மகாராஷ்டிரத்தில் 1962-ல் இருந்து 1964வரை கவர்னராகப் பணியாற்றியிருக்கிருர்.

## பட்டங்கள் பல

பண்டிட் விஜயலட்சுமிக்கு கிடைத்த கௌரவப்பட்டங்கள் விரல்விட்டு எண்ணமுடியாது. இந்தியாவிலும் வெளி

வடபகுதியில் அரசாங்கத்தால் கையேற்கப்பட்ட மூன்று தமிழ் பௌத்த பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் 'பரிசு' வழங்கி உள்ளது.

கரவெட்டி ஸ்ரீநாரததமிழ் பௌத்த பாடசாலை, அல்வாய் ஆனந்த செமகேதமிழ் பௌத்த பாடசாலை, அச்சுவேலி ஸ்ரீவிபாஸி தமிழ் பௌத்தபாடசாலை ஆகியவற்றின் சுமார் 45 ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் இலங்கைப் பௌத்தகாங்கிரஸ் பேனைகளும், மைக்கூடுகளும் அன்பளிப்பாகவழங்கி உள்ளது

கூடாது'' என்று குறிப்பிட்டார்.

## சிரமதானம்

நாவற்குழி, புதன்

நாவற்குழி சித்தி விநாயகர் ஆலயத்திற்கான புதிய வீதி ஒன்றினை நாவற்குழி சனசமூக நிலையத்தினரும் நாவற்குழி இந்து வாலிபர் சங்கத்தினரும் கூட்டாக சிரமதானமூலம் அமைத்தனர். இப் பணிக்கு நாவற்குழிப்பகுதிப் பொதுமக்கள் குளிர்பானங்கள் வழங்கினர் ரூபா 500 பெறுமதியான வேலைகள் நடைபெற்றன.

இக்காலத்திலே கதரிலே மிகமிக நேர்த்தியான துணிகள் இந்தியாவில் உற்பத்தியாகின்றன. இலங்கையிலும் கதரை உற்பத்திசெய்ய அரசாங்க கைத்தொழில் இலாகா ஏன் முயலக்கூடாது? இதனுல் மகாத்மாவின் உள்ளம் குளிருவதுடன் இங்கும் பல ஏழைகளுக்கு வருமானம் கிடைத்து வேலையில்லாக் கஷ்டமும் குறையக் கூடுமல்லவா? வெறும் பேச்சுடன், இவ்விழாவை முடித்துவிடாமல், உருப்படியான இவ்வித காரியங்கள் செய்து பயனடையவேண்டியதே முக்கியமாகும்.

கோட்டை, புதன்

கடற்றொழில் கூட்டுஸ்தாபனம் வேலைநிறுத்தத்திலீடுபடாத தமது ஊழியர்கள் அனைவருக்கும் அவர்கள் சேவையைப்பாராட்டி நற்சாட்சிப் பத்திரம் வழங்கியுள்ளது.

## பலாத்காரத்தை ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

என்பதை எடுத்துக் காட்டி விளக்கினவர் மகாத்மா காந்தி.

மாநகரசபை ஆட்சியில் பலபிரச்னைகள் ஏற்படுவது வழக்கம். இதுபோன்ற நாலாயிரம் மடங்கு அதிகமான பிரச்னைகளை நாம் தினசரி சமாளித்து வருகின்ருேம்.

## இந்தியப் பிரதமர்

இந்தியப் பிரதமர் கூட இன்று தனது ஆட்சியில் சங்கடமான நிலையில் பலதரபிரச்னைகளுக்கு மத்தியில் இருக்கிருர் என்பதை இங்கு நான் கூறிவைக்கவிரும்புகிறேன்.

இந்தியாவும் இலங்கையும் ஒன்ருகஇணைந்திருக்க வேண்டிய நாடுகள். நல்லெண்ணம் அன்பு, நேசம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இதை நான் சொல்கின்றேன்.

தென் கிழக்காசிய நாடுகளில் இன்று விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கும் இன்றைய வேளையில் இலங்கை இந்திய இணைப்பு அவசியமாகும்.

(கா. நி.)

## பஸ்சேவை விஸ்தரிப்பு

கோப்பாய், புதன்

ஆனைக்கோட்டையில் இருந்து இருபாலைச் சந்தி வரையிலான பஸ் சேவை இருபாலை கிழக்குப்பகுதி வரை விஸ்தரிக்கப்படவுள்ளது. இதன்மூலம் இருபாலைப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கு வசதி ஏற்பட்டுள்ளது

## பிரதமரை .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வாலிப முன்னணி செயலாளர் தெரிவித்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கான உதவிகளை திரு நியதிபால செய்துதருவதாக உறுதியளித்திருக்கிருர். திருவாளர்கள் எஸ். பி. முத்துக்குமாரசுவாமி, ஜே. ஜே. மனேகரன், திரு. ஜி. ஞானசிங்கம் ஆகியவர்களும் பேசினுர்கள்.

## மயானகாண்டம்

சுழிபுரம், வியாழன்

பண்ணுகம்மெய்கண்டான் மகாவித்தியாலயத்துக்கு அருகாமையில் கலைமன்றத்தினரின் ஆதரவில் ''மயான காண்டம்'' நாடகம் இன்று மாலை வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது.

பழந்தமிழரின் யாழ் கருவிகள்:

# யானையை வசப்படுத்திய யாழ்

— சுவாமி விபுலானந்தர்

[அகில இந்திய வானெலியின் திருச்சி வானெலி நிலையத்தில் 1942-ம் ஆண்டு மார்ச் 19-ந் திகதி சுவாமி விபுலானந்த அடிகளார் நிகழ்த்திய சொற்பொழிவின் முதல் பகுதி நேற்று வெளியாகியிருந்தது. இறுதிப் பகுதி இங்கு வெளியாகிறது]

## மகரயாழ்

மகரயாழ் எனப் பெயரிய யாழ்க்கருவியானது பேரியாழின் இருபத்தொரு நரம்புகளிலே இரண்டினையோ நான்கினையோ ஏற்ற பெற்றி குறைத்ததினுலேயே ஏற்படுகிற பத்தொன்பது அல்லது பதினேழு நரம்புகளாலே இயல்வது. இது மகரமீனின் உருவமுடையதாகலின் அப்பெயர் பெற்றது. இலங்கையிலே அனுராதபுரம் என்னும் பழைய நகரிலேயுள்ள வெள்ளரசு மரக்கோவில் வாயிலின் மேலே மகரதோரணம் வனையப்பட்டிருக்கிறது. இம்மகர தோரணத்திலே தான் மகரத்தின் உருவை நான் முதல் முதலாகக் கண்டேன். மகரயாழானது யவனத் தச்சர்களாலே செய்யப்பட்டதென உதயண காவியத்திற் கூறப்பட்டிருக்கிறது. ஆடலும் பாடலுங் கண்டும் கேட்டும் களிகூருகிற இன்ப விளையாடலினுள்ளே உபயோகிக்கப் படுவதாதலின் மகர யாழ் கண்ணுக்கினிய அழகிய தோற்றத்தினையுடையதாயிருந்தது. சிலப்பதிகாரம் கானல்வரிப் பாடலிலே கூறப்பட்டது மகர யாழாக இருக்கலாம்.

'சித்திரப் படத்துட்புக்குச்
செழுங்கோட்டின் மலர்
புனைந்து
மைத்தடங்கண் மண
மகளிர் கோலம்போல
வனப்பெய்திப்
பத்தருங் கோடும்
ஆணியும் நரம்பும் என்று
இத்திறத்துக் குற்றம்
நீங்கிய யாழ்.'

என்றமையினுலே யாழ்க் கருவியானது மை தீட்டிய கரியகண்களையுடைய மணப் பெண்போல அழகு வாய்ந்திருந்ததென்பதும், அதனுடைய கோட்டிலே மலர் மாலை கட்டப்பட்டிருந்ததென்பதும், அது சித்திரமெழுதிய அழகிய உறையினுள்ளே வைக்கப்பட்டிருந்ததென்பதும் அறியக் கிடக்கின்றது.

உதயண காவியத்தினுள்ளே வத்தவர் கோமகனுகிய உதயணன் கையிலே கோடபதி என்னும் யாழ். இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த யாழின் இசையினுலே உதயணன் யானையை வசப்படுத்தினுன். சீவக சிந்தாமணியிலே சீவக நம்பி காந்தருவதத்தையை யாழ்ப்போரிலே வென்று அவளுக்கு மணமாலை சூட்டிய செய்திகூறப்பட்டிருக்கிறது. யாழ் செய்தற்குரியமரம் இத்தன்மையதாக இருக்கவேண்டும், யாழின் நரம்பு இத்தன்மையதாக இருக்கவேண்டும் என்னும் உண்மைகள் சீவக சிந்தாமணியினுள்ளே கூறப்பட்டிருக்கின்றன.

## தமிழரின் யாழ்

சிந்துநதி தீரத்திலே பழைய காலத்தில் விளங்கிய முகிஞ்சதரோ நாட்டிலும், பாரசீகக் கடற்கரையிலிருந்த சுமேரு நாட்டிலும் மிசிரம் என்னும் பழம் பெருமையுடைய எகிப்து நாட்டிலும் பிற நாடுகளிலும் யாழ்க்கருவிகள் இருந்ததாக அறிகிருேம். மேற்குறித்த நாட்டினரெல்லாம் தமிழரோடு தொடர்புடையவரென வரலாற்று நூலாசிரியர்கள் கூறுகிருர்கள். பழைய எகிப்து நாட்டினரும் தமிழரைப்போலவே தாரம் முதலாக ஏழிசைகளையும் பிறப்பித்தார்கள்.

தமிழ்நாட்டிலே முதலிலே தோன்றிய யாழ்க் கருவியானது உலகத்தின் பல பாகங்களிலும் பரவியதென்று கொள்வதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன. குறுநில மன்னர்களும் செல்வப் பிரபுக்களும் பாணனை ஆதரித்தனர். அவனும் அவர் மனங்களிப்ப இன்னிசைப் பாடல்களைத் தன்கருவியிலிசைத்துப் பாடினுன்.

காதலையும் வீரத்தையும் கொடைத்திறத்தையும் அருட்டிறத்தையும் முன்னுளிலே இசைத்த யாழ்க்கருவியானது இப்பொழுது தமிழ் நாட்டிலும் வழக்கற்று மறைந்திருக்கிறது. அதுமீட்டும் தோற்றுதல்வேண்டும். அதன் இனிய நரம்பிலிருந்து எழும் இசையானது தமிழரது செவிவழிச்சென்று முன்னுளிற்போலவே இந்நாளிலும் காதலையும் வீரத்தையும் கொடைத்திறத்தையும் அருட்டிறத்தையும் மனத்திலுதிக்கச் செய்தல் வேண்டும். அதனுல் நாடு நலமடைய வேண்டும்.

(முற்றும்)

# அழியாத ஆனந்தம்

பொங்குமிசைத் தமிழாய்ந்து பொற்குவியல் என்னும்
புத்தமுத யாழ்நூலைத் தந்தபெரும் முனிவர்
எங்கள்தமிழ் வள்ளலென ஏற்றிமகிழ் கின்ருேம்!
இத்தரையில் வித்தகர்பின் புத்தியொடு நின்ருேம்!
எங்குமுளோர் இன்பமுற இரவுபகல் உழைத்தே
எம்மிதயம் வாழ்கின்ற ஏந்தலரின் உருவை
இங்குநிலை நாட்டிஉயர் வாழ்வதனைக் காட்டி
இன்னும்வரு வோர்மனதில் இன்பஒளி பெய்தோம்

—மு. சடாட்சரன்

ஈழநாடு பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன் ரோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்கள் அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org